Find us on facebook/tamilmirror | Follow us on tamilmirror | epaper/tamilmirror.lk

# தமிழ் Mirror

www.tamilmirror.lk

TUESDAY, NOVEMBER 22, 2022

செவ்வாய்க்கிழமை நவம்பர் 22, 2022 | ஒளி: 08 கதிர்: 148 | பக்கம்:08 | நகரப்பதிப்பு ★ | FREE



இதுவரையான காலப்பகுதியில்

## 606,000 சுற்றுலாப் பயணிகள் இலங்கைக்கு வருகை

தேசிய மற்றும் சர்வதேச ரீதியில் பல சவால்களுக்கு இலங்கை முகங்கொடுத்துள்ள நிலையிலும், இலங்கைக்கான சுற்றுலாப் பயணிகளின் வருகை தற்போது வரையில் 600,000 ஐத் தாண்டியுள்ளது. இந்த ஆண்டின் இதுவரையான காலப்பகுதியில் 606,000 சுற்றுலாப் பயணிகள் இலங்கைக்கு வருகை தந்துள்ளனர் எனவும், இது ஒரு குறிப்பிடத்தக்க சாதனையாகும் என்றும் சுற்றுலாத்துறை அமைச்சர் ஹரின் பெர்னாண்டோ தெரிவித்துள்ளார். தொடர்ச்சி P2

## ஒக்டோபரில் சரிந்தது முதன்மை பணவீக்கம்

தேசிய நுகர்வோர் விலைச் சுட்டெண்ணின் அடிப்படையில் ஆண்டுக்கு ஆண்டு அளவிடப்படும் முதன்மை பணவீக்கம் 70.6% ஆக வீழ்ச்சியடைந்துள்ளதாக தொகை மதிப்பு மற்றும் புள்ளிவிவரத் திணைக்களம், நேற்று (21) அறிவித்தது.

செப்டெம்பர் மாதத்தில் 73.7 சதவீதமாக உயர்ந்து காணப்பட்ட பணவீக்கம் ஒக்டோபர் மாதத்தில் 70.6 சதவீதமாக குறைந்துள்ளதாக திணைக்களம் வெளியிட்ட அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

அத்துடன், செப்டெம்பர் மாதத்தில் 85.8 சதவீதமாக காணப்பட்ட உணவுப் பணவீக்கம் ஒக்டோபர் மாதத்தில் 80.9 சதவீதமாக வீழ்ச்சியடைந்துள்ளது. மேலும், செப்டெம்பரில் 62.8 சதவீதமாக இருந்த உணவு அல்லாத பணவீக்கம் 61.3 சதவீதமாகவும் குறைந்துள்ளதாகவும் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

மீன், அரிசி, கருவாடு, தேங்காய் எண்ணெய், சீனி, மைசூர் பருப்பு, உருளைக் கிழங்கு, கோழி இறைச்சி, பிஸ்கட், தொடர்ச்சி P2



ஓமான் ஆட்கடத்தல்

## சரணடைந்த பெண் கைது

### கைதானோர் தொகை 3ஆக அதிகரிப்பு

ஓமான் ஆட்கடத்தலுடன் தொடர்புடைய பெண் ஒருவர், குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தில் நேற்று (21) காலை சரணடைந்த போது கைது செய்யப்பட்டுள்ளார்.

கடந்த சில வாரங்களாக குறித்த சந்தேகநபர் தொடர்பில் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்ட நிலையில், பதிவு செய்யப்பட்ட நான்கு முகவரிகளிலும் அவர் வசிக்கவில்லை என்று சீ.ஐ.டியினர் தெரிவித்தனர்.

ஆட்கடத்தலில் ஈடுபட்ட சம்பவம் குறித்து, டுபாயில் இருந்து இலங்கை திரும்பிய 40 வயதுடைய நபர், குடிவரவு மற்றும் குடியகல்வு திணைக்கள அதிகாரிகளால், கட்டுநாயக்க விமான நிலையத்தில் வைத்து சனிக்கிழமை (19) கைது செய்யப்பட்டிருந்தார். தொடர்ச்சி P2

ஜனாதிபதி ரணிலுடன்

## புதிதாக பேச ஒன்றுமில்லை



இனப்பிரச்சினைக்கு தீர்வு என்ன என்பதனை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நன்றாக அறிந்துள்ள போதும், அதனை சிங்கள மக்களிடம் கூறுவதற்கு தயங்குகின்றார். தீர்வுத் திட்டங்கள் என்ன என்பதனை அவர் ஏற்கெனவே அறிந்துள்ளதால் தாம் அவருடன் புதிதாக பேசுவதற்கு எதுவுமே இல்லை என தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் பாராளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரித்தார். தொடர்ச்சி P2

## இந்தியாவுக்கு செல்வதற்கு கம்மன்பிலவுக்கு அனுமதி



பிவிதுரு ஹெல உறுமய கட்சியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான உதய கம்மன்பிலவின் வெளிநாட்டு பயணத்தடையை ஏழு நாள்களுக்கு தற்காலிகமாக நீக்குமாறு, கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி நாமல் பலல்லே, நேற்று (21) உத்தரவிட்டார்.

சமய வழிபாடுகளில் ஈடுபடுவதற்காக நவம்பர் 23 முதல் நவம்பர் 29 வரை இந்தியா செல்லவுள்ளதாகவும் தனது பயணத்தடையை தற்காலிகமாக நீக்குமாறும் கோரி, கம்மன்பில எம்.பி தனது சட்டத்தரணி ஊடாக நகர்த்தல் பத்திரத்தை தாக்கல் செய்திருந்தார். தொடர்ச்சி P2



பசிலை வரவேற்ற

## அதிகாரிகளை பதவி நீக்கம் செய்ய வேண்டும்

நாடு திரும்பிய பசில் ராஜபக்‌ஷவை வரவேற்பதற்காக சுயாதீன ஆணைக்குழுவான தேசிய பொலிஸ் ஆணைக்குழுவின் தவிசாளரும் அதன் உறுப்பினர் ஒருவரும் விமான நிலையத்துக்குச் சென்றதாகவும், இது தொடர்பில் நடவடிக்கை எடுத்து சம்பந்தப்பட்ட அதிகாரிகளை பதவி நீக்கம் செய்ய வேண்டும் என்று எதிர்க்கட்சி பாராளுமன்ற உறுப்பினர் நளின் பண்டார தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று (21) ஒழுங்கு பிரச்சினையொன்றை முன்வைத்தே அவர் இதனை தெரிவித்தார். இதன்போது, தொடர்ச்சி P2

## ரூ.12 கோடியை மோசடி செய்த யாழ். சகோதரிகள் கைது

போலி வங்கி ஆவணங்களைப் பயன்படுத்தி 12 கோடி ரூபாயை மோசடி செய்த சகோதரிகள் இருவர், நிதிக் குற்றப் புலனாய்வு பிரிவினரால் யாழ்ப்பாணத்தில் கைது செய்யப்பட்டுள்ளனர்.

நாவாந்துறை பிரதேசத்தைச் சேர்ந்த 30 மற்றும் 34 வயதான ஒரே குடும்பத்தைச் சேர்ந்த இரண்டு சகோதரிகளே கைது செய்யப்பட்டுள்ளனர்.

யாழிலுள்ள தனியார் வங்கியொன்றில் வர்த்தகரான உயிரிழந்த தமது தந்தையால் 100 கோடி ரூபாய் பணமும் அதிகளவான நகைகளும் வைப்பிலிடப்பட்டு உள்ளதாகவும் அவற்றை சட்டரீதியில் மீளப்பெறவேண்டும் என்றும் கூறி, 2021 ஜனவரி முதல் ஜூன் வரை பல தடவைகளில் நோர்வே பிரஜையிடமிருந்து 12 கோடி ரூபாய் பணத்தை பெற்றுள்ளனர் என்று விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

23 வங்கிக் கணக்குகளில் இருந்து பணம் மீளப் பெறப்பட்டுள்ளதாகவும் அந்தப் பணத்தின் ஒருபகுதி இன்னொரு நபரின் கணக்குக்கு மாற்றப்பட்டுள்ளதாகவும் சந்தேகநபர்களை கைது செய்த சந்தர்ப்பத்தில் தெரியவந்துள்ளது. தொடர்ச்சி P2




## பீனிக்ஸ் பறவைகள் போல் மீண்டும் மீண்டும் வருவோம்

எதிர்வரும் 27ஆம் திகதி இடம்பெறவுள்ள நினைவேந்தல் நிகழ்வுக்கு வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் பல தடைகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. தடைகளுக்கு மத்தியில் எம் உறவுகளை நாங்கள் நினைவு கூருவோம் என தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியன் தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றத்தில் நேற்று (21) இடம்பெற்ற 2023 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டத்தின் இரண்டாம் வாசிப்பு மீதான விவாதத்தில் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

இதன்போது அங்கு தொடர்ந்தும் உரையாற்றிய அவர், “எமது மண்ணுக்காகவும் இனத்திற்காகவும், இன விடுதலைக்காகவும் உரிமைக்காகவும் போராடி வீர மரணமடைந்த எமது வீரர்களை இந்த வேளையில் நினைவுப்படுத்திக் கொள்கிறேன். 1978 ஆம் ஆண்டு எமது இளைஞர்களின் கைகளில் இருந்த பேனா பறிக்கப்பட்டு ஆயுதம் வழங்கப்பட்டது. தொடர்ச்சி P2




## சாறியை மாற்றிய சில ஆசிரியைகள்

நாடளாவிய ரீதியிலுள்ள பாடசாலை ஆசிரியைகள் சிலர், நேற்று (21) பாடசாலைக்கு சாறியை அணிந்துவராமல், கவுன், நீள காற்சட்டை ஆகிய அடைகளை அணிந்து வந்திருந்தனர்.

நாட்டின் தற்போதைய பொருளாதார நெருக்கடி நிலைமையால்,சாறிகளின் விலைகள் அதிகரித்துள்ளதன் காரணமாக,

தொடர்ச்சி P2



சுதந்திர வர்த்தக உடன்படிக்கைக்கான

## பேச்சுவார்த்தைகள் மீண்டும் ஆரம்பம்

சுதந்திர வர்த்தக உடன்படிக்கை பேச்சுவார்த்தைகளை மீள ஆரம்பிப்பது அரசாங்கத்தின் எதிர்பார்ப்பாகும் என ஜனாதிபதியின் செயலாளர் சமன் ஏக்கநாயக்க தெரிவித்தார்.

தெற்காசியா மற்றும் கிழக்காசியாவிலுள்ள மிகப்பெரிய பொருளாதாரங்கள் மற்றும் உலகளாவிய பெறுமதி வலையமைப்புடன் இலங்கையை ஒருங்கிணைத்து அதனை கிழக்கு பிராந்தியத்திற்கும் விரிவுபடுத்துவதன் மூலம் பிராந்திய பரந்த பொருளாதார கூட்டு முயற்சியில் (RCEP) இணைந்து கொள்வதே ஜனாதிபதியின் விருப்பமாகும் என்றும் ஜனாதிபதியின் செயலாளர் தெரிவித்தார். தொடர்ச்சி P2




## சாரணர் இயக்கத்தை விஸ்தரிப்பதற்கு ஒத்துழைப்பு

சாரணர் இயக்கத்தை 2024 ஆம் ஆண்டாகும்போது ஒன்பது மாகாணங்களையும் உள்ளடக்கியதாக விஸ்தரிப்பதற்கும் அதன் அங்கத்துவத்தை 02 இலட்சமாக அதிகரிப்பதற்கும் தேவையான பூரண ஒத்துழைப்பை வழங்குவதாக ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க தெரிவித்தார். இதற்காக கல்வி அமைச்சு மற்றும் இளைஞர் விவகார அமைச்சு ஆகியவற்றின் ஆதரவைப் பெறவுள்ளதாகவும் ஜனாதிபதி மேலும் குறிப்பிட்டார். தொடர்ச்சி P2

மார்ச்சுக்குள்

## ஒன்பது கப்பல்கள் வந்தடையும்

அடுத்த ஆண்டு மார்ச் மாதத்துக்குள் இலங்கைக்கான சுற்றுலாப்பயணிகளுடன் ஒன்பது பயணிகள் கப்பல்கள் இலங்கை துறைமுகங்களை வந்தடையவுள்ளதாக சிவில் விமானப் போக்குவரத்து அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா சபையில் தெரிவித்தார். தொடர்ச்சி P2



ஊவா மாகாணத்தில்

## தொழிற்சங்க நடவடிக்கைக்கு தயாராகிய இ.தொ.கா

■ மஹேஸ்வரி விஜயனந்தன்

ஊவா மாகாணத்தின் அக்கரப்பத்தனை பெருந்தோட்ட நிறுவனத்தின் கீழ் உள்ள தோட்டங்களில் இருந்து ஒரு கிலோ கிராம் தேயிலைத் தூள் கூட அத் தோட்டங்களிலிருந்து வெளியே அனுப்பாமல் இருக்க தீர்மானிக்கப்பட்டுள்ளது என இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் தலைவர் செந்தில் தொண்டமான் தெரிவித்தார்.

நேற்று (21) சௌமியபவனில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். தொடர்ச்சி P2

PAGE 1 தொடர்ச்சிகள்

## ஒக்டோபரில் சரிந்தது முதன்மைப்...

கோதுமை மா, மிளகாய்த் தூள் மற்றும் பச்சை மிளகாய் ஆகிய உணவுப் பொருட்களின் விலைகள் குறைக்கப்பட்டன.

எனினும், பால் மா, பெரிய வெங்காயம், பழங்கள், தேயிலை தூள்/இலைகள், தேங்காய், சிவப்பு வெங்காயம், பாண், அரிசி மா, காய்கறிகள், குழந்தைகளின் பால் மா, பச்சைப்பயறு, பப்படம் ஆகியவற்றின் குறியீட்டு மதிப்புகள் அதிகரித்துள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது. இதேவேளை, கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண்ணின் அடிப்படையில் செப்டெம்பர் மாதத்தில் 69.8 சதவீதமாகக் காணப்பட்ட பணவீக்கம் ஒக்டோபரில் 66 சதவீதமாக வீழ்ச்சியடைந்திருந்தது.

செப்டெம்பர் மாதத்தில் 94.9 சதவீதமாக இருந்த உணவுப் பணவீக்கம் ஒக்டோபரில் 85.6 சதவீதமாக குறைவடைந்துள்ளது என்றும் திணைக்களம் குறிப்பிட்டுள்ளது.

## சரணடைந்த பெண் கைது

வத்தளையைச் சேர்ந்த குறித்த நபர், மருதானையில் வெளிநாட்டு வேலைவாய்ப்பு நிறுவனம் ஒன்றை நடத்தி வந்தாக தெரியவந்தது.

இந்நிலையில், இலங்கை பெண்களை மத்திய கிழக்கு நாடுகளுக்கு அனுப்பும் தரகரான ஆட்கடத்தல் விவகாரத்துடன் தொடர்புடைய மற்றுமொரு சந்தேகநபர் ஞாயிற்றுக்கிழமை (20) அவிசாவளையில் வைத்து கைது செய்யப்பட்டார்.

மத்திய கிழக்கு நாடுகளில் சிக்கியுள்ள இலங்கை பெண்கள் செய்த முறைப்பாடுகளின் அடிப்படையில் சந்தேக நபர் கைது செய்யப்பட்டதுடன், ஓமானுக்கான ஆட்கடத்தல் தொடர்பில் இதுவரை 03 சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, உடல் மற்றும் மன ரீதியான துஷ்பிரயோகங்களுக்கு உள்ளான சுமார் 90 பெண்கள் ஓமானில் உள்ள இலங்கை தூதரகத்தால் பாதுகாப்பான இடத்தில் தங்க வைக்கப்பட்டுள்ளதாக தெரியவருகிறது.

## 606,000 சுற்றுலாப்...

இது இலங்கையின் சுற்றுலாத்துறையின் அசைக்க முடியாத பலத்தை பிரதிபலிக்கிறது மட்டுமல்லாது, அரசியல் மற்றும் பொருளாதார அமைதியின்மை காரணமாக நாடு பெற்ற எதிர்மறையான விமர்சனங்களின் போது அதனை போக்க வெளிநாட்டு தூதரகங்கள் மேற்கொண்ட முயற்சிகளின் வெற்றி எனவும் அமைச்சர் தெரிவித்துள்ளார்.

சுற்றுலா மேம்பாட்டு ஆணையம் வெளியிட்ட தற்காலிகத் தரவுகளின்படி, இந்த மாதத்தின் முதல் 17 நாள்களில் 31,302 சுற்றுலாப் பயணிகள் இலங்கைக்கு வருகை தந்துள்ளதாகவும், கடந்த மாதத்தில் 1,355 ஆக இருந்த வருகையில் இருந்து இந்த மாதம் ஒரு நாளைக்கு சராசரியாக 1,800 ஆக உயர்ந்துள்ளது என்பதையும் இது காட்டுகிறது, முக்கியமாக ரஷ்ய பயணிகளால் அதிகரிக்கப்பட்டது எனவும் தெரிவித்துள்ளார். அதேபோல் இந்த மாதத்தின் முதல் 17 நாள்களில் மொத்த வருகையில் 24% அல்லது 7,684 ஆக ரஷ்யா சுற்றுலா பயணிகள் எனவும், அதைத் தொடர்ந்து இந்தியா 17% அல்லது 5,279, ஐக்கிய இராச்சியம் 8% அல்லது 2,538, ஜெர்மனி 7% அல்லது 2,115, மற்றும் அவுஸ்திரேலியா 5 % அல்லது 1,527 என பதிவாகியுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார். தினசரி சராசரி வருகை 2,500க்கு மேல் இருந்தால், டிசெம்பர் மாத இறுதிக்குள் 800,000 சுற்றுலாப்பயணிகளின் இலக்கை எட்ட முடியும் என்று அமைச்சர் பெர்னாண்டோ நம்பிக்கை தெரிவித்தார்.

மத்திய வங்கி வெளியிட்டுள்ள தரவுகளின்படி, சுற்றுலாத் துறையின் வருமானம் ஒக்டோபர் மாதத்தில் 1 பில்லியன் டொலரை கடந்துள்ளது. ஜனவரி முதல் ஒக்டோபர் வரை, சுற்றுலாத்துறையின் வருவாய் மொத்தம் 1.02 பில்லியன் டொலராக இருந்தது. இது கோவிட்-19 பாதிப்பால் கடந்த ஆண்டின் இதே காலகட்டத்தை விட 546% அதிகரிப்பை பிரதிபலிக்கிறது.

இந்த ஆண்டு செப்டெம்பரில் 53.6 மில்லியன் டொலராக இருந்த ஒக்டோபர் மாதத்திற்கான வருமானம் 75.6 மில்லியன் டொலராக உயர்ந்ததைத் தொடர்ந்து 1 பில்லியன் டொலரைத் தாண்டியுள்ளது எனக் குறிப்பிட்டார்.

## இந்தியாவுக்கு செல்வதற்கு கம்மன்பிலவுக்கு அனுமதி

அந்தக் கோரிக்கையை ஏற்றுக் கொண்ட நீதிபதி, கம்மன்பிலவின் கடவுச்சீட்டை விடுவிக்குமாறு நீதிமன்றப் பதிவாளருக்கு உத்தரவிட்டதுடன், குடிவரவு மற்றும் குடியகல்வுத் திணைக்களத்தின் கட்டுப்பாட்டாளருக்கு அறிவிக்குமாறும் உத்தரவிட்டார்.

போலி அற்றோனிப் பத்திரத்தை பயன்படுத்தி அவுஸ்திரேலிய வர்த்தகர் பிரையன் சாதிக்குக்கு சொந்தமான நிறுவனத்தின் பங்குகளை 21 மில்லியன் ரூபாய்க்கு விற்று மோசடி செய்ததாக கம்மன்பிலவுக்கு எதிராக வழக்குத்தாக்கல் செய்யப்பட்டது.

குறித்த வழக்கில், அவரது கடவுச்சீட்டை முடக்கிய நீதிமன்றம் வெளிநாட்டு பயணத்தடை விதித்து உத்தரவிட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## அதிகாரிகளை பதவி நீக்கம் செய்ய வேண்டும்

நளின் பண்டார எம்.பி மேலும் கூறுகையில்,

நாங்கள் அனைவரும் ஒன்றிணைந்து அரசியலமைப்பின் 21 ஆவது திருத்தத்தை நிறைவேற்றினோம். அதில் தெளிவாக ஆணைக்குழுக்களின் சுயாதீனத்துவம் தொடர்பில் கூறப்பட்டுள்ளது. இந்நிலையில் பசில் ராஜபக்ஷவை வரவேற்க தேசிய பொலிஸ் ஆணைக்குழுவின் தவிசாளர் சந்ரா பெர்னாண்டோ, தேசிய பொலிஸ் ஆணைக்குழுவின் உறுப்பினர் பி.பெரேரா ஆகியோர் கட்டுநாயக்க விமான நிலையத்திற்கு சென்றுள்ளார்கள்.

இதனால் தேசிய பொலிஸ' ஆணைக்குழுவின் சுயாதீனத்தன்மை கேள்விக்குள்ளாக்கியுள்ளது. அந்த ஆணைக்குழுவின் தவிசாளரையும், உறுப்பினரையும் ஆணைக்குழுவில் இருந்து வெளியேற்றுங்கள். இதனால் அரசியலமைப்பை நிறைவேற்றியும் எந்தப் பலனும் இல்லை. அன்று காக்கை வெளியே போக முயன்ற போது விமான நிலையத்தில் இருந்தவர்களே பிடித்தனர். இந்தக் காக்கையை வரவேற்க ஆணைக்குழுவின் தவிசாளர் போகின்றார். அதேபோன்று வெட்கமின்றி வரவேற்க அங்கே சென்றவர்கள் இந்த இடத்திலும் இருக்கின்றனர் என்றார். இதன்போது பதிலளித்த சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன, சுயாதீன ஆணைக்குழுக்களுக்கான உறுப்பினர் நியமனம் இன்னும் ஓரிரு நாள்களில் இடம்பெறும் என்றார்.

## புதிதாக பேச...

பாராளுமன்றத்தில் நேற்று (21) வரவு செலவுத் திட்டத்தின் இரண்டாவது வாசிப்பு மீதான 6 ஆம் நாள் விவாதத்தில் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு கூறினார். அதன்போது அவர் மேலும் கூறுகையில், மாவீரர் வாரத்தின் முதல் நாளாக இன்று அமைந்துள்ளது. இந்த நாட்டில் யுத்தம் நிறைவடைந்து 14 வருடங்கள் ஆகின்றன. இந்நிலையில் வடக்கு கிழக்கில் வாழும் தமிழ் மக்களிடம் நீங்கள் நலமாக இருக்கின்றீர்களா என்று கேட்கின்ற போது, இதற்கான விடையாக இல்லை என்பதனை நான் கூறுகின்றேன். சுதந்திரம் மற்றும் தனித் தாயகம் என்பதனை அடிப்படையாகக் கொண்டே அங்கு போராட்டம் நடந்தது. ஆனால் இந்த போராட்டம் முடிவுக்கு வந்த பின்னர் சுதந்திரம் கேள்விக்குறியானது. யுத்தம் நிறைவடைந்து 14 வருடங்கள் கடந்தும் அந்த மக்களின் பிரச்சினைகள் தீர்க்கப்படவில்லை. இன்று அவர்கள் மோசமான நிலைமையிலேயே இருக்கின்றனர். யுத்தம் முடிவடைந்த பின்னர் பொதுவாக சிந்தித்தால் நாடு அபிவிருத்தியடைந்திருக்க வேண்டும். நாடு முன்னேற்றத்தை கண்டிருக்க வேண்டும். ஆனால் யுத்தம் உச்சக்கட்டத்தில் இருக்கும் போது இருந்த நிலைமையை விடவும் மோசமான நிலைமையிலேயே தற்போது நாங்கள் இருக்கின்றோம். இதனால் எங்கேயோ பாரிய தவறு நடைபெற்றுள்ளது. இந்த சிஸ்டம் தொடர்பில் நாங்கள் சிந்தித்து பார்க்க வேண்டும்.

தற்போதைய ஜனாதிபதி அனுபவம் வாய்ந்தவர் அவருக்கு சமஷ்டி தொடர்பில் தெரியும். அதுவே தீர்வு என்றும், அதன்மூலம் நாடு சுபீட்சம் அடையும் என்றும் தெரியும். பாதுகாப்புக்கான செலவுகளை குறைக்க முடியும் என்றும் தெரியும். ஆனால் அதனை சிங்கள மக்கள் மத்தியில் கூறுவதற்கு அவர் தயங்குகின்றார். சமஷ்டி என்பது தனிநாடோ, அதற்கு முரணானதோ அல்ல. நாட்டை ஒருங்கிணைப்பதற்கானதாக இருக்கின்றது. பிரித்தானியா காலத்தில் பிரிந்திருந்த நாடுகளை இணைப்பதற்கானதாக இருந்தது.

அதுமட்டுமன்றி இந்தச் சபையில் எடுக்கப்பட்ட தீர்மானங்களும் காரணம். இலங்கை இப்போது படுபாதாளத்திற்கு சென்றுள்ளது. ஜனாதிபதி தோல்வியடைந்தவராகவே இருக்கின்றார். அவர் தனது அரசியல் வாழ்வின் இறுதிக் காலத்திலாவது புதிய ஆரம்பத்திற்கான அடித்தளத்தை ஏன் ஏற்படுத்த முடியாது என்று கேட்கின்றேன். ஜனாதிபதி தமிழ்க் கட்சிகளுக்கு அழைப்பு விடுத்துள்ளார்.

இந்நிலையில் ஜனாதிபதியுடன் புதிதாக நாங்கள் கதைப்பதற்கு எதுமில்லை. இதற்கான தீர்வு என்ன என்பதும் அவருக்கு தெரியும். ஆகக் குறைந்தது சிங்கள மக்களுக்காவது அவர் நேர்மையாக இருக்க வேண்டும். சமஷ்டியின் அடிப்படைகளை கூற முடியும். அவ்வாறு செய்யும் போதே தேவையற்ற செலவுகளை குறைத்து நாட்டை முன்னோக்கி கொண்டு சென்று எதிர்கால சந்ததியினரின் எண்ணங்களை நிறைவேற்ற முடியும் எனக் கூறினார்.

## பீனிக்ஸ் பறவைகள் போல் மீண்டும் மீண்டும் வருவோம்

1948ஆம் ஆண்டு முதல் பேச்சுவார்த்தை ஊடாக அரசியல் உரிமைக்காக போராடி, பெரும்பான்மை சமூகத்தின் அரசாங்கங்களால் ஏமாற்றப்பட்டதன் பின்னரே ஆயுதம் வழங்கப்பட்டது. 1956 ஆம் ஆண்டு முதல் தந்தை செல்வா ஒப்பந்தம், டட்லி செல்வா ஒப்பந்தங்கள் ஆகியவை நிறைவேற்றப்படாத பட்சத்தில் தான் தமிழ் இளைஞர்கள் ஆயுதமேந்திய நிலை ஏற்பட்டது. எதிர்வரும் 27ஆம் திகதி இடம்பெறவுள்ள நினைவேந்தல் நிகழ்வுக்கு வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் பல தடைகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. தடைகளுக்கு மத்தியில் எம் உறவுகளை நாங்கள் நினைவு கூருவோம்.

தந்தை செல்வாவின் காலத்தில் இருந்து போராடிய கட்சியின் வாலிப முன்னணியின் தலைவர் சேயோன் ஒருமுறை "தமிழ் சமூகம் பீனிக்ஸ் பறவை போல் அழிக்க அழிக்க மீண்டும் வருவோம்" என குறிப்பிட்டார். தந்தை செல்வா காலத்தில் ஆரம்பமான இந்த அரசியல் போராட்டம், பல தலைமைகளை கண்டுள்ளது.

முன்னாள் தலைவர் அமிர்தலிங்கம், இரா.சம்பந்தன், மாவை சேனாதிராஜா, சிறிதரன் மற்றும் சுமந்திரன் ஆகியோர் தமிழர்களின் உரிமைக்காக தொடர்ந்து போராடினார்கள். தற்போது நானும் தமிழ் சமூகத்தின் உரிமைக்காக போராடும் நிலை தோற்றம் பெற்றுள்ளது என்றார்.

## சாறியை மாற்றிய...

சாறிக்கு பதிலாக ஏனைய ஆடைகளை அணியவேண்டிய நிலைமை ஏற்பட்டுள்ளது என ஆசிரியைகள் சிலர், சமூக வலைத்தளங்களில் பதிவிட்டுள்ளனர்.

பொருளாதார நெருக்கடி காரணமாக, சாறியை அணிவதில் கடும் சிரமங்கள் ஏற்பட்டுள்ளன. ஆகையால், அரச ஊழியர்கள் பொருத்தமான ஆடைகளை அணிந்து கடமைக்கு சமூகமளிக்கலாம் என பொதுநிர்வாக அமைச்சு சுற்றறிக்கையை விடுத்துள்ளது.

ஏனைய அரச ஊழியர்களைப் போல, சாறி அல்லாமல், பொருத்தமான ஆடைகளை அணிந்துவந்து கடமையாற்றுவதற்கு ஆசிரியைகளுக்கு அனுமதியளிக்குமாறு, இலங்கை ஆசிரியர் சங்கம், கல்வியமைச்சிடம் கோரிக்கை விடுத்திருந்தது.

அந்தக் கோரிக்கையை கல்வியமைச்சு நிராகரித்து இருந்தது. இந்த நிலை யிலேயே, ஆசிரியைகள் சிலர், ஏனைய ஆடைகளை அணிந்துகொண்டு பாடசாலைகளுக்கு நேற்று (21) சென்றுள்ளனர்.

## சாரணர் இயக்கத்தை விஸ்தரிப்பதற்கு ஒத்துழைப்பு

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு இலங்கை தலைமை சாரணர் மற்றும் போசகர் பதவிகளை இலங்கை சாரணர் இயக்கத்தால் உத்தியோகபூர்வமாக வழங்கும் நிகழ்வு நேற்று (21) ஜனாதிபதி அலுவலகத்தில் நடைபெற்றது. இதன்போது கருத்து தெரிவிக்கும்போதே ஜனாதிபதி இவ்வாறு தெரிவித்தார்.

சாரணர் இயக்கத்தின் தற்போதைய முன்னேற்றம் தொடர்பான அறிக்கையும் இச்சந்தர்ப்பத்தில் ஜனாதிபதியிடம் கையளிக்கப்பட்டது. இங்கு உரையாற்றிய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, 75ஆவது சுதந்திர தினக் கொண்டாட்டத்திற்கு சாரணர் இயக்கத்தின் பூரண ஆதரவைப் பெற எதிர்பார்ப்பதாகவும் ஜனாதிபதி அலுவலகத்தின் கீழ், காலநிலை மாற்றம் தொடர்பான ஜனாதிபதியின் ஆலோசகர் ருவன் விஜேவர்தன தலைமையில் முன்னெடுக்கப்பட்டு வரும் சுற்றுச்சூழல் தொடர்பான நிகழ்ச்சிகளில் இணைந்து செயற்படுமாறும் சாரணர்களுக்கு ஜனாதிபதி அழைப்பு விடுத்தார்.

இலங்கை சாரணர் இயக்க ஹோமாகம மாவட்டக் கிளையின் 60 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு ஜனாதிபதிக்கு நினைவுப் பதக்கம் அணிவிக்கப்பட்டதுடன் நினைவுச் சஞ்சிகையும் வழங்கி வைக்கப்பட்டது.

பிரதான சாரணர் ஆணையாளர் சட்டத்தரணி ஜனப்ரித் பெர்னாண்டோ, பிரதி பிரதான ஆணையாளர் எம்.எஸ். எஸ். முஹீட், செயற்குழுத் தலைவர் ரன்சிறி பெரேரா மற்றும் ஏனைய அதிகாரிகள், ஹோமாகம மாவட்ட சாரணர் ஆணையாளர் கலாநிதி அனில் பெரேரா, புதிய மாவட்ட ஆணையாளர் கே.ஏ. சந்திரபத்மா, உதவி மாவட்ட ஆணையாளர் சுரங்க ஹந்தபான்கொட உள்ளிட்ட பலர் இந்நிகழ்வில் கலந்துகொண்டனர்.

## ஒன்பது கப்பல்கள்...

கடந்த வாரம் 880 பயணிகளை ஏற்றிக்கொண்டு ஒரு கப்பல் இலங்கைக்கு வந்ததாகவும், 3,000 பயணிகளுடன் நவம்பர் 28 ஆம் திகதி மேலுமொரு பயணிகள் கப்பல் வருகை தரவுள்ளதாகவும் அவர் தெரிவித்தார். வெளிநாட்டு கையிருப்பை வலுப்படுத்தும் வகையில் பல இலாபகரமான முயற்சிகளை மறுகட்டமைக்க அரசாங்கம் திட்டமிட்டுள்ளதாக தெரிவித்த அவர், ஸ்ரீ லங்கா டெலிகொம் போன்ற பல இலாபகரமான அரச நிறுவனங்களை மறுசீரமைக்க உத்தேசித்துள்ளதாகவும், மறுசீரமைப்பு செயற்பாட்டின் மூலம் கிடைக்கும் டொலர் வெளிநாட்டு நாணய கையிருப்பை பலப்படுத்துவதைத் தவிர வேறு எதற்கும் பயன்படுத்தப்பட மாட்டாது எனவும் தெரிவித்தார்.

## தொழிற்சங்க நடவடிக்கைக்கு...

தொடர்ந்து தெரிவித்த அவர், அக்கரப்பத்தனை பெருந்தோட்ட நிறுவனத்தின் கீழ் தொழில் புரியும் 15 தோட்டங்களைச் சேர்ந்த 10,000க்கும் மேற்பட்ட தொழிலாளர்கள் குறித்த தோட்ட நிர்வாகத்தினரால் பாரிய பிரச்சினைகளை எதிர்நோக்குகின்றனர்.

தொழிலாளர்கள் முழு நேர தொழிலில் ஈடுபட்டாலும் அவர்களுக்கு அரை நாளுக்கான சம்பளமே வழங்கப்படுதல், தோட்டங்கள் உரிய பராமரிப்பின்றி காடுகளாக மாறியுள்ளமை உள்ளிட்ட பல்வேறு சிக்கல்களை தோட்ட நிர்வாகம் தொழிலாளர்களுக்கு ஏற்படுத்துகின்றது.

எனவே குறித்த பிரச்சினைகள் தொடர்பில் கலந்துரையாடுவதற்கு 2, 3 தடவைகள் தம்மால் அக்கரபத்தனை பிளான்டேசனுக்குரிய தோட்ட நிர்வாகத்தினருக்கு அழைப்பு விடுக்கப்பட்ட போதிலும் அவர்கள் முறையாக பதில் அளிக்கவில்லை.

இதனால் அந்நிறுவனத்துக்கு எதிராக தொழிற்சங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும், இப் பிரச்சினைகளுக்கு தீர்வு வழங்கும் வரை ஊவா மாகாணத்தில் உள்ள அக்கரப்பத்தனை பெருந்தோட்ட நிறுவனத்தின் கீழ் இயங்கும் தோட்டங்களில் இருந்து ஒரு கிலோ கிராம் தேயிலை கூட நிர்வாகத்தால் வெளியேற்றாமல் இருக்க தீர்மானித்ததாகவும் செந்தில் தொண்டமான் தெரிவித்தார்.

## பேச்சுவார்த்தைகள் மீண்டும் ஆரம்பம்

இந்த அபிவிருத்திச் செயற்பாட்டின் இறுதிப் பயனாளிகளாக தனியார் துறை கைத்தொழில்கள் இருப்பதால் இதற்கு ஆக்கப்பூர்வமாக பங்களிக்குமாறு தனியார் துறைக்கு ஜனாதிபதியின் செயலாளர் அழைப்பு விடுத்தார்.

சுதந்திர வர்த்தக உடன்படிக்கை பேச்சுவார்த்தைகளை மீள ஆரம்பிப்பது தொடர்பில் வர்த்தக சபை மற்றும்

> **அபிவிருத்திச் செயற்பாட்டில், தனியார் துறை கைத்தொழில்கள் ஆக்கப்பூர்வமாக பங்களிக்க முடியுமென ஜனாதிபதியின் செயலாளர் அழைப்பு விடுத்தார்**

கைத்தொழில் ஆலோசனைக் குழுக்களுக்கு அறிவிக்கும் கலந்துரையாடல் ஜனாதிபதியின் செயலாளர் சமன் ஏக்கநாயக்க தலைமையில் நிதியமைச்சில் இடம்பெற்றது.

## ரூ.12 கோடியை மோசடி...

இலங்கையரான நோர்வே பிரஜை செய்த முறைப்பாட்டின் அடிப்படையில் குறித்த சந்தேகநபர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

அவர்களை கைது செய்த சந்தர்ப்பத்தில் யாழ். நீதிபதிகள், வங்கி முகாமையாளர்கள், சட்டத்தரணிகள், கிராம சேவகர்கள் உள்ளிட்ட பல அதிகாரிகளின் முத்திரைகள் மற்றும் கையொப்பங்கள் அடங்கிய போலி ஆவணங்கள், மோசடிக்கு பயன்படுத்திய வங்கி புத்தகங்களும்

> **நீதிபதிகள், வங்கி முகாமையாளர்கள், சட்டத்தரணிகள், கிராம சேவகர்கள் உள்ளிட்ட பல அதிகாரிகளின் முத்திரைகள், கையொப்பங்கள் அடங்கிய போலி ஆவணங்கள், வங்கி புத்தகங்கள் மீட்கப்பட்டுள்ளன**

மீட்கப்பட்டுள்ளன.

17ஆம் திகதி கைதுசெய்யப்பட்ட இவரையும் 18ஆம் திகதியன்று யாழ். நீதவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்திய போது, அவர்களை டிசெம்பர் 1ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதவான் உத்தரவிட்டுள்ளார்.



## சபையில்

# ஒரு நிமிடம் சத்தியாக்கிரகம்



மீனவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளுக்கு உடனடியாக தீர்வு வழங்குமாறு கோரி, ஐக்கிய மக்கள் சக்தி பாராளுமன்ற உறுப்பினர் உறுப்பினர் திலிப் வெதஆராச்சி சபையில் ஒரு நிமிடம் சத்தியாக்கிரகப் போராட்டத்தை முன்னெடுத்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று (21) வரவு- செலவுத் திட்டத்தின் இரண்டாம் வாசிப்பு மீதான 6 ஆம் நாள் விவாதத்தில் தான் உரையாற்றிய பின்னர், சபை நடுவே சென்று கீழே அமர்ந்த அவர் இவ்வாறு சத்தியாக்கிரகப் போராட்டத்தில் ஈடுபட்டார்.

சர்வதேச மீனவர் தினத்தையொட்டி, கறுப்பு உடையணிந்தே திலிப் வெதஆராச்சி பாராளுமன்றத்திற்கு நேற்று வருகைதந்திருந்தார். இவர், வரவு செலவுத் திட்ட விவாதத்தில் உரையாற்றும் போது, டீசல் மற்றும் மண்ணெண்ணெய் தட்டுப்பாடு, எரிபொருள் விலைகள் அதிகரிக்கப்பட்டுள்ளமை, மீனவர் குடும்பங்கள் எதிர்நோக்கும் பொருளாதார நெருக்கடிகள் உள்ளிட்ட மீனவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பில் கருத்துகளை முன்வைத்தார்.

இதனை தொடர்ந்து தனது உரை முடிவடையும் போது, இன்று (21) சர்வதேச மீனவர் தினமாகும். ஆனால், மீனவர்கள் கைவிடப்பட்ட நிலையிலேயே இருக்கின்றனர். இதனால் அவர்களின் பிரச்சினைகளுக்கு தீர்வு காணுமாறு வலியுறுத்தி இன்றைய பாராளுமன்ற கூட்டம் நிறைவடையும் வரையில் சபையில் சத்தியக்கிரக போராட்டத்தி ஈடுபடுவேன் என்றார்.

எனினும், பிரதி சபாநாயகரின் அறிவுறுத்தலுக்கு அமைய, ஒரு நிமிடத்திலேயே தனது போராட்டத்தை நிறைவு செய்துகொண்டார்.

## பகிர்ந்தளிக்க நடவடிக்கை எடுத்தால்

# ஜனாதிபதி ரணிலுக்கு பூரண ஆதரவு வழங்குவோம்

**பழனி திகாம்பரம்**

தோட்டத் தொழிலாளர்களை சிறு தோட்ட உரிமையாளர்களாக மாற்றும் வகையில் மலையகத்தில் தோட்டக் காணிகளை பகிர்ந்தளிக்க நடவடிக்கை எடுப்பாராக இருந்தால் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு பூரண ஆதரவை வழங்கத் தயாராக இருப்பதாக தமிழ் முற்போக்குக் கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர் பழனி திகாம்பரம் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று (21) உரையாற்றும் போதே அவர் இவ்வாறு கூறினார். அவர் மேலும் கூறுகையில்,

இந்த அரசாங்கத்திடமும் பெருந்தோட்ட வீடமைப்புக்கு பொறுப்பாக உள்ள அமைச்சரிடமும் முக்கிய கோரிக்கையொன்றை முன்வைக்கின்றேன். மலையக பெருந்தோட்ட துறையில் நான் அமைச்சராக இருந்த போது வீடுகள் அமைக்கப்பட்டன. குறிப்பிட்ட வீடமைப்பு திட்டத்தில் தற்போது மாதாந்த அடிப்படையில் பணம் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுவதாக சில பயனாளிகள் முறையிட்டுள்ளனர். பொருளாதார நெருக்கடிக்கு மத்தியில் பெருந்தோட்ட மக்களின் மாதாந்த சம்பளம் அவர்களின் உணவுத் தேவையை பூர்த்தி செய்வதற்குகூட போதுமானதாக இல்லை. இவ்வாறான நிலைமையில் மாதாந்த அடிப்படையில் அவர்களிடம் வீடமைப்பு கடனை அறவிட முயற்சிப்பது பாரிய சிக்கலை ஏற்படுத்தும். இதனால் அவர்களிடம் கடன் அறவிடுவதை நிறுத்துமாறு கேட்கின்றேன் என்றார்.

# தமிழர்களால் இனியும் முடியாது

தமிழ் மக்கள் ஏற்கெனவே பல தியாகங்களை செய்து விட்டதால் அரசு கோருவது போல் அவர்களால் இனியும் தியாகங்களைச் செய்ய முடியாது எனத் தெரிவித்த பாராளுமன்றக் குழுக்களின் பிரதித்தலைவரும் ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் யாழ். மாவட்ட எம்.பியுமான அங்கஜன் இராமநாதன், சர்வகட்சி அரசு அமைந்தால் மட்டுமே நாட்டில் அரசியல் தீர்வு சாத்தியமாகும் என்றும் கூறினார்.

பாராளுமன்றத்தில் நேற்று (21) இடம்பெற்ற 2023 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டத்தின் இரண்டாம் வாசிப்பு மீதான 6 ஆம் நாள் விவாதத்தில் உரையாற்றும் போதே இவ்வாறு தெரிவித்த அவர் மேலும் கூறுகையில்,



வடக்கு மக்கள் எதிர்கொண்டுள்ள அடிப்படை பிரச்சினைகளுக்கு எவ்வித தீர்வும் வரவு செலவுத் திட்டத்தில் முன்வைக்கப்படவில்லை. கடந்த காலங்களில் முன்வைக்கப்பட்ட வரவு செலவுத் திட்டம் பிரபல்யமானது என குற்றஞ்சாட்டப்படுகிறது. ஆனால் அந்த வரவு செலவுத் திட்டங்கள் அக்கால சூழலுக்கு பொருத்தமானதாக சமர்ப்பிக்கப்பட்டன என்பதை மறுக்க முடியாது. முன்னாள் பிரதமர் சிறிமாவோ பண்டாரநாயக்கவின் காலத்தில் எமது மக்கள் சின்ன வெங்காயம் விளைச்சல் செய்து கல் வீடு கட்டினார்கள். இதனை எவராலும் மறுக்க முடியாது.தேசிய விவசாயத்தை மேம்படுத்த அதன் பின் ஆட்சியில் இருந்த அரசுகள் அவதானம் செலுத்தவில்லை.

தற்போதைய வாழ்க்கை செலவில் ஒரு குடும்பத்தின் ஒருமாத செலவு குறைந்தப்பட்சம் ஒரு இலட்சம் ரூபாயாக உள்ளது.நாட்டில் எத்தனை குடும்பங்களுக்கு ஒரு இலட்சம் ரூபாய் கிடைக்கப்பெறுகிறது. நாட்டில் 88 சதவீதமானோர் மோசமான நெருக்கடியை எதிர்க்கொண்டுள்ளார்கள். இதுவே உண்மையான கள நிலைவரம். நாட்டை விட்டு வெளியேறுபவர்களின் எண்ணிக்கை நாளாந்தம் அதிகரித்துச் செல்கிறது.37 இலட்ச மக்கள் அரசிடமிருந்து நிவாரணம் பெற்றுக் கொள்ள விண்ணப்பித்துள்ளார்கள்.குறைந்த வருமானம் பெறுபவர்களுக்கு 5,000 ரூபாய் வழங்கப்படுவது எந்தளவுக்கு சாத்தியம்? இன ஒற்றுமைக்கு மதிப்பளிக்காமல் இடம்பெற்ற 30 வருட கால யுத்தம் பொருளாதாரத்தை பாதித்தது.தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்கு தீர்வு காணப்பட வேண்டும். அதற்கு அரசு மீது மக்கள் நம்பிக்கை கொள்ள வேண்டுமானால் சர்வகட்சி அரசு முறையே இறுதி தீர்வு. இதனையே ஸ்ரீ லங்கா சுதந்திரக்கட்சியும் மக்களும் கோருகிறார்கள். ஜனதிபதியும் முதலில் இதனை ஏற்றுக்கொண்டார். சர்வகட்சி அரசு உருவாகும்போதுதான் அரசியல் தீர்வு சாத்தியம் என்பதை அனைவரும் புரிந்து கொள்ள வேண்டும் என்றார்.



## பசிலுக்கு

# பாதுகாப்பு வழங்க யார் அனுமதித்தது?

முன்னாள் அமைச்சர் பசில் ராஜபக்‌ஷ நாடு திரும்பும் போது எந்த அடிப்படையில் விமான நிலையத்தின் பிரமுகர் வருகை பகுதியூடாக வருவதற்கும், பொலிஸ் போக்குவரத்து மோட்டார் சைக்கிள் பாதுகாப்பை வழங்குவதற்கும் அனுமதி வழங்கப்பட்டது என்று சபாநாயகரிடம் ஐக்கிய மக்கள் சக்தி பாராளுமன்ற உறுப்பினர் எஸ்.எம்.மரிக்கார் கேள்வியெழுப்பினார்.

பாராளுமன்றத்தில் நேற்று (21) ஒழுங்குப் பிரச்சினையொன்றை முன்வைத்து உரையாற்றும் போதே அவர் இவ்வாறு கேள்வியெழுப்பினார். அதன்போது மரிக்கார் எம்.பி மேலும் கூறுகையில்,

பசில் ராஜபக்‌ஷ தற்போது பிரதேச சபை உறுப்பினராகவும் இல்லை. இவ்வாறான நிலைமையில் கட்டுநாயக்க விமான நிலையத்தில் பிரமுகர் பகுதியூடாக வருவதற்கு எவ்வாறு இடமளிக்கப்பட்டது. அத்துடன் அவருக்கு பொலிஸ் போக்குவரத்து மோட்டார் சைக்கிள் பாதுகாப்பும் எப்படி வழங்கப்பட்டது. இதனை சபாநாயகர் தெளிவுப்படுத்த வேண்டும் என்றார்.

## விக்கிரமசிங்க – சம்பந்தன் ஒப்பந்தத்தை செய்து

# நிரந்தர அரசியல் தீர்வை வழங்க வேண்டும்



75 ஆவது சுதந்திர தினத்திற்கு முன்னர் தமிழர்களுக்கான அரசியல் தீர்வை வழங்குவதாக ஜனாதிபதி குறிப்பிட்டுள்ளார். விக்கிரமசிங்க - சம்பந்தன் ஒப்பந்தத்தை செய்து, அதனூடாக தமிழ் மக்களுக்கு நிரந்தர அரசியல் தீர்வை வழங்க வேண்டும் என தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியன் தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதியால் சமர்ப்பிக்கப்பட்டுள்ள 2023 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டத்தில் தமிழ் மக்களின் நீண்டகால அரசியல் பிரச்சினைக்கு தீர்வு பற்றி குறிப்பிடவில்லை. தமிழர்களுக்கு அரசியல் தீர்வு வழங்காத காரணத்தால் பொருளாதாரம் பாதிக்கப்பட்டுள்ளது என்பதையும் அவர் எவ்விடத்திலும் சுட்டிக்காட்டவில்லை. வெறுமனமே சர்வதேசத்தையும், தமிழ் தலைமைகளையும் ஏமாற்றும் பொய்யான வாக்குறுதிகளை ஏற்க முடியாது.

தமிழ் அரசியல் கட்சிகளுக்கு மத்தியில் பல கருத்து வேறுபாடுகள் காணப்படுகின்றன. ஆனால் சமஷ்டி அடிப்படையிலான தீர்வு என்று குறிப்பிடும் போது தமிழ் சமூகத்திற்கான அனைத்து தமிழ் அரசியல் கட்சிகளும் ஒருமித்த தன்மையில் செயற்படுவோம். கோட்டா- மஹிந்த சகோதரர்களுக்கு மத்தியில் ஒற்றுமையில்லாமல் கோட்டபய நாட்டை விட்டு ஓடிப்போனார். இவ்வாறு கருத்து முரண்பாடுகளுக்காக தமிழ் மக்களின் உரிமைகளை ஒருபோதும் விட்டுக் கொடுக்கமாட்டோம் என்ற வாக்குறுதியை இந்த மாதத்தில் வழங்கிக் கொள்கிறேன் எனத் தெரிவித்தார்.

## நாட்டை மீட்டெடுக்க

# 6 தீர்வுத் திட்டங்கள் எம்மிடம் உள்ளன




வரிச் சலுகைகள் மற்றும் மோசடிகளால் கடந்த காலங்களில் இழந்த நிதிகளையும் வளங்களையும் ஐக்கிய மக்கள் சக்தி அரசாங்கம் ஆட்சிக்கு வந்ததும் மீளப் பெற்று அவற்றை மக்களிடம் ஒப்படைக்க நடவடிக்கை எடுக்கும் என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார். நாட்டை சரியான பாதைக்கு கொண்டு செல்வதற்கான 6 தீர்வுத் திட்டங்களை முன்வைக்க எதிர்பார்க்கின்றோம் எனவும் கூறியுள்ளார்.

பாராளுமன்றத்தில் நேற்று (21) வரவு- செலவுத் திட்டத்தின் இரண்டாம் வாசிப்பு மீதான 6 ஆம் நாள் விவாதத்தில் உரையாற்றும் போதே எதிர்க்கட்சித் தலைவர் இவ்வாறு தெரிவித்தார். அதன்போது அவர் மேலும் கூறுகையில்,

நாங்கள் வங்குரோத்து நாட்டில் பெரும் பொருளாதார நெருக்கடியை எதிர்நோக்குகின்றோம். இந்த நேரத்தில் நாட்டை ஆபத்திற்குள் கொண்டு செல்லும் அரசியல் டீல்களே செய்யப்படுகின்றன. ஜனாதிபதியின் வரவு செலவு திட்ட உரையை பார்க்கும் போது, நாட்டுக்கு நன்மையில்லாத ஒன்றாகவே உள்ளது. அதனால் நாட்டை சரியான பாதைக்கு கொண்டு செல்வதற்கான 6 தீர்வுத் திட்டங்களை முன்வைக்க எதிர்பார்க்கின்றோம்.

வரவு -செலவுத் திட்டத்தில் அநீதியான வகையில் வரித் திட்டங்கள் உள்ளன. கீழ் நிலையில் உள்ள மற்றும் வேலை செய்யும் மக்களுக்கே இதனால் பாதிப்புகள் உள்ளன. வரிக் கொள்கை மிகவும் அநீதியானது. வரிச் சலுகை விடயத்தில் பெரிய நிறுவனங்களுக்கு 50 சதவீதமாக இருந்த வரியை 25 சதவீதம் வரையில் குறைத்தமை தொடர்பில் எந்தளவுக்கு அரச நிதியை இழக்க நேரிட்டுள்ளது.

இன்னும் ஊழல் நிறைவுக்கு வரவில்லை. ஆனால் ஐக்கிய மக்கள் சக்தி அரசாங்கத்தில் நாங்கள் இந்த வரியை அறவிட்டு அரச வருமானத்தை அதிகரிப்போம். கடந்த காலங்களில் 5 கணக்காய்வு தடயவியல் அறிக்கைகள் மூலம் ஈபிஎப் கொள்ளை, பிணைமுறி மற்றும் பங்கு சந்தை மோசடிகள் தொடர்பில் கூறப்பட்டுள்ள போதும், அது தொடர்பில் நடவடிக்கை எடுக்கப்படவில்லை. அந்த மோசடிகள் நிறுத்தப்படவும் இல்லை. நாடு வங்குரோத்தடைந்துள்ள நேரத்தில் நாங்கள் ஒரே வரையறைக்குள் இருந்து செயற்படக் கூடாது. அதனை தாண்டிப் போக வேண்டும். நாட்டில் யுத்தம் நடக்கின்ற போதும் கூட முடியாது என்று மக்களுக்கு தேவையானவற்றை வழங்காது இருக்கவில்லை. எவ்வாறாயினும் மக்களுக்கான மாற்றங்கள், தீர்வுகள் ஐக்கிய மக்கள் சக்தியிடம் உள்ளன. நாங்கள் போகக் கூடிய இடங்களுக்கு சென்று நாங்கள் இந்த நாட்டை கட்டியெழுப்புவோம் என்றார்.



# கொரிய தூதுவர் சபாநாயகரைச் சந்தித்தார்

கொரிய குடியரசின் இலங்கைக்கான தூதுவர் வூஜின் ஜியோங் சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தனவை பாராளுமன்றத்தில் (17) சந்தித்தார். கொரிய சீமோல் அமைப்பின் தலைவர் லீ ஸோங் ஜொங் மற்றும் சீமோல் அமைப்பின் இலங்கை பணிப்பாளர் சோய் சுங் வூ ஆகியோரும் இந்தச் சந்திப்பில் கலந்துகொண்டனர்.

சீமோல் அமைப்பால் மேற்கொள்ளப்படும் விவசாய உற்பத்திகளை விருத்தி செய்தல், கிராமிய மக்களை வலுப்படுத்தல் போன்ற சமூக அடிப்படையிலான திட்டங்கள் தொடர்பில் சீமோல் அமைப்பின் தலைவர் சபாநாயகருக்கு விளக்கமளித்தார். அதற்கமைய, விவசாயம் உள்ளிட்ட ஏனைய துறைகளிலான அபிவிருத்திகள் மூலம் இரு நாடுகளுக்குமிடையிலான இரு தரப்பு உறவுகளை விருத்தி செய்துகொள்ளக்கூடிய முறை தொடர்பில் இதன்போது விரிவாகக் கலந்துரையாடப்பட்டது. இச்சந்திப்பில் இராஜாங்க அமைச்சர் கனக ஹேரத்தும் கலந்துகொண்டார்.

# தேர்தலை நடத்துவதன் மூலம் தீர்வு கிடைக்காது



தற்போது மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளுக்கு தேர்தலை நடத்துவதன் மூலம் தீர்வு கிடைக்காது என அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா வலியுறுத்தியுள்ளார். 2023ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டத்தின் இரண்டாம் வாசிப்பு மீதான விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே அவர் இதனை தெரிவித்துள்ளார். தற்போது நாடு எதிர்நோக்கும் சவால்களின் பாரதூரத்தை சில தரப்பினர் முழுமையாக புரிந்து கொள்ளவில்லை. இந்த நேரத்தில் அரசியல் செய்வது நாட்டை பின்னோக்கி தள்ளும் எனவும் அவர் குறிப்பிட்டார்.

உலக சுகாதார ஸ்தாபனத்தால்

# கல்முனை ஆதார வைத்தியசாலை ‘ஒருநாள் வைத்திய சேவை’ திட்டத்துக்கு தெரிவு

வி.ரி சகாதேவராஜா

உலக சுகாதார ஸ்தாபனத்தால் இலங்கையில் முன்னெடுக்கப்படும் ‘ஒரு நாள் வைத்திய சேவை முறைமை’ (Day care system) நிகழ்ச்சித் திட்டத்துக்கு கிழக்கு மாகாணத்திலிருந்து கல்முனை வடக்கு ஆதார வைத்தியசாலை தெரிவுசெய்யப்பட்டு உள்ளது.

இந்த நிகழ்ச்சித் திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கான ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டுச் செயற்பாடுகளுக்காக, உலக சுகார அமைப்பின் பிரதிநிதிகளான அமெரிக்க டுக் பல்கலைக்கழக பேராசிரியர் வைத்தியகலாநிதி சியுங்கிர்ல் அஹ்ன் மற்றும் நிகழ்ச்சி திட்ட ஒருங்கிணைப்பாளர் களனிப் பல்கலைக்கழக பேராசிரியர் வைத்தியகலாநிதி செகான் வில்லியம்ஸ் ஆகியோர் வைத்தியசாலைக்கு கள விஜயத்தை மேற்கொண்டிருந்தார்கள். கல்முனை ஆதார வைத்தியசாலையின் வைத்திய



அத்தியட்சகர் டொக்டர் இரா முரளீஸ்வரன் தலைமையிலான வைத்திய நிபுணர் குழாம் மற்றும் பொறுப்பு அதிகாரிகளால் பல சாதகமான கருத்துகள் முன்வைக்கப்பட்டதுடன் பல பின்னூட்டல்களும் உலக சுகார அமைப்பின் பிரதிநிதிகளுக்கு வழங்கப்பட்டன.

‘ஒரு நாள் வைத்திய சேவை முறைமை’யின் பிரகாரம், நோயாளி ஒருவர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட நாளிலேயே அவருக்கான சகல மருத்துவ சேவைகளும் வழங்கப்பட்டு, அதே தினத்திலேயே வீடு செல்வதற்கான ஏற்பாடுகளைச் செய்வதாகும்.

இதன் மூலம், நோயாளியின் மனநிலை மிகச் சிறப்பாக அமைவதோடு, அரசாங்கத்துக்கும் ஏற்படும் மேலதிக விரயங்களும் தவிர்க்கப்படும் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

வைத்தியசாலையின் நடைமுறைகளை பார்வையிட்ட உலக சுகாதார ஸ்தாபனத்தின் நிபுணர்கள், “கிழக்கு மாகாணத்தில் தரமானதும் வினைதிறனானதுமான வைத்திய சேவையை முன்னெடுப்பதன் காரணமாகவே இவ் வைத்தியசாலை, இந் நிகழ்ச்சித் திட்டத்துக்காகத் தெரிவு செய்யப்பட்டது” எனத் தெரிவித்தனர்.

# தெற்குக்கு திருப்பப்பட்ட கரும்புள்ளியான் குடிநீர் திட்ட நிதி

## அறிக்கை சமர்ப்பிக்க ஜனாதிபதி பணிப்பு

மு. தமிழ்ச்செல்வன்

முல்லைத்தீவு, மாந்தை கிழக்கு கரும்புள்ளியான் குடிநீர் திட்டத்துக்காக உலக வங்கியால் ஒதுக்கப்பட்ட 1,000 மில்லியன் ரூபாய் நிதி, தென்பகுதிக்குத் திருப்பட்ட விடயம் தொடர்பில், தனக்கு அறிக்கை சமர்ப்பிக்குமாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, தனது செயலாளர் ஈ.எம்.எஸ்.பீ ஏக்கநாயக்கவுக்கு பணிப்புரை விடுத்துள்ளதாக, வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சாள்ஸ் நிர்மலநாதன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறியதாவது; கரும்புள்ளியான் குடிநீர் திட்டத்துக்கு உலக வங்கியால் ஒதுக்கப்பட்ட நிதி, அதிகாரிகளால் தென்பகுதிக்கு மாற்றப்பட்டு, கரும்புள்ளியான் குடிநீர் திட்டம் கைவிடப்பட்டுள்ளதாக பொது மக்களால் எனது கவனத்துக்குக் கொண்டு வரப்பட்டது.

இது தொடர்பில், வரவு - செலவு திட்டத்துக்கு முன் இடம்பெற்ற நிதி ஆலோசனை

**“ கரும்புள்ளியான் குடிநீர் திட்டத்துக்கு ஒதுக்கப்பட்ட நிதியில் 15 மில்லியன் ரூபாயை திறைசேரிக்கு மாற்றியதாகவும், குறித்த திட்டத்தை நடைமுறைப்படுத்த காலம் போதாது என்பதோடு கொவிட்19 காரணமாகவும் திட்டத்தை நடைமுறைப்படுத்த முடியவில்லை**

குழு கூட்டத்தில் அமைச்சர்கள், உயரதிகாரிகளின் கவனத்துக்குக் கொண்டு சென்றேன்.

இதைத் தொடர்ந்து, புதன்கிழமை (16) பாராளுமன்றத்தில் ஒத்திவைப்பு வேளை பிரேரணையைக் கொண்டு சென்றேன். இதில் என்னோடு இணைந்து பாராளுமன்ற உறுப்பினர்களான சிறிதரனும் ரிஷாட் பதியூதீனும் விடயத்தை பேசியிருந்தார்கள்.

இதைத் தொடர்ந்து கரும்புள்ளியான் விடயம் பற்றி பேசுவதற்கு தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபையின் தலைவர் உள்ளிட்ட உயரதிகாரிகள் கலந்துகொண்ட கூட்டம் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

குறித்த கூட்டத்தில், அதிகாரிகள் கருத்துதெரிவித்த போது, கரும்புள்ளியான் குடிநீர் திட்டத்துக்கு ஒதுக்கப்பட்ட நிதியில் 15 மில்லியன் ரூபாயை திறைசேரிக்கு மாற்றியதாகவும், குறித்த திட்டத்தை நடைமுறைப்படுத்த காலம் போதாது என்பதோடு கொவிட்19 காரணமாகவும் திட்டத்தை நடைமுறைப்படுத்த முடியவில்லை எனத் தெரிவித்தனர்.

நாட்டில் கரும்புள்ளியான் கிராமத்தில் மட்டும்தானா கொவிட் தாக்கம் ஏற்பட்டது எனக் கேள்வி எழுப்பிய நான், எனது கடுமையான ஆட்சேபனையை தெரிவித்துவிட்டு, கூட்டத்திலிருந்து இடைநடுவில் வெளியேறினேன். இதைத் தொடர்ந்து ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, வவுனியா வந்த போது அவரது கவனத்துக்குக் கொண்டு சென்ற போதே, அவர் தனது செயலாளருக்கு விடயத்தை ஆராய்ந்து அறிக்கை சமர்ப்பிக்குமாறு பணிப்புரை விடுத்துள்ளார் எனத் தெரிவித்தார்.









# ஏற்றுமதி விழிப்புணர்வு கருத்தரங்கு

தேசிய அருங்கலைகள் பேரவையின் எற்பாட்டில், ஏற்றுமதி சார்ந்த உற்பத்தி அபிவிருத்தி வேலைத்திட்டம் 2022 / 23 தொடர்பான விழிப்புணர்வு கருத்தரங்கு, மண்முனை வடக்கு பிரதேச செயலக மண்டபத்தில் தேசிய அருங்கலை பேரவையின் மாவட்ட உத்தியோகத்தர் தே. கிறிஷாந் தலைமையில் வெள்ளிக்கிமை (18) நடைபெற்றது.

மட்டக்களப்பு மாவட்டத்தில் தெரிவு செய்யப்பட்ட கைப்பொருள் உற்பத்தியாளர்களின் உற்பத்திகளை சர்வதேச சந்தைக்கு ஏற்றுமதி செய்வதற்காக அவர்களை ஊக்குவிப்பதற்கும் வலுவூட்டுவதற்கான கருத்தரங்காக இந்நிகழ்வு அமைந்திருந்தது.

எம். எஸ். எம் நூர்தீன்

# ஏறாவூர் அறிவிப்பு துறைசார் பயிற்சி

எச்.எம்.எம் பர்ஸான்

மட்டக்களப்பு, ஏறாவூர் அலிகார் தேசிய பாடசாலையில் அறிவிப்பு துறைசார் பயிற்சி நெறி சனிக்கிழமை (19) நடைபெற்றது.

வொயிஸ் ஒப் ஏறாவூர் அமைப்பின் ஏற்பாட்டில் அதன் தலைவர் எம்.ஐ.எம் தஸ்லீம் தலைமையில் ஏறாவூர் கோட்டத்திலுள்ள மாணவர்களுக்கு இப்பயிற்சி நெறி அளிக்கப்பட்டது.

இதில், வளவாளர்களாக அமைப்பின் ஆலோசகரும் சிரேஸ்ட ஆசிரியருமான எம்.ஏ.சீ.எம் தாஸிம், இளைஞர் சேவை உத்தியோகத்தர் எம்.ஐ.எம் றம்ஸின், அறிவிப்பாளர் இஸ்ஸத் முஸ்தபா ஆகியோர் கலந்து கொண்டனர்.



நிறுக்கும், அளக்கும் உபகரணங்களுக்கு

# முத்திரை பதிக்கும் பணிகள்

எம்.எஸ்.எம் ஹனீபா

அம்பாறை மாவட்டத்தில் 2022/2023 அளவை, நிறுவை உபகரணங்களை சரிபார்த்து முத்திரை இடும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

வர்த்தக நிலையங்கள், அங்காடிகள், கூட்டுறவுச் சங்கம் போன்றவற்றில் உள்ள நிறுக்கும், அளக்கும் உபகரணங்கள் ஆகியவற்றை பரிசோதனை செய்து முத்திரை பதித்துக்கொள்ள வேண்டும் என்று வலியுறுத்தப்பட்டுள்ளது.

மாவட்டத்திலுள்ள சகல பிரதேச செயலகங்களிலும் முத்திரை இடும் வேலைத்திட்டம் நடைபெறுவதால் நிறுக்கும், அளக்கும் உபகரணங்களை வைத்திருக்கும் உரிமையாளர்கள் காலை 09.00 மணி தொடக்கம் பிற்பகல் 03.00 மணி வரை முத்திரை பதித்துக் கொள்ள முடியும்.

12 மாத கால இடைவெளியில் முத்திரையிடாது, நிறுவை, அளவை உபகரணங்களை பயன்படுத்தல் அல்லது உடைமையில் வைத்திருத்தல் தண்டணைக்குரிய குற்றமாகும்.



# ஒரே தடவையில் ஆறு விருதுகள்

## பல்துறை கலைஞர் வீரமுனை சுதர்சன்

வி.ரி சகாதேவராஜா

கிழக்கு மாகாண தமிழ் இலக்கிய விழாவில் (2020/2021 ) வீரமுனையைச் சேர்ந்த பல்துறை கலைஞர் அருளானந்தம் சுதர்சன், ஒரே தடவையில் ஆறு துறைகளில் ஆறு விருதுகளை வென்று சாதனை படைத்தார்.

இளங்கலைஞர் விருது, கலை இலக்கிய விருது, பாடலாக்கம் முதலாம் இடம், சிறுகதை முதலாம் இடம், மரபுக்கவிதை முதலாம் இடம், புதுக்கவிதை இரண்டாம் இடம் ஆகிய ஆறு விருதுகளைப் பெற்றுக்கொண்டார்.

கிழக்கு மாகாண தமிழ் இலக்கிய விழா கடந்த வாரம் திருகோணமலை உவர்மலை விவேகானந்தா கல்லூரியில் நடந்தேறியது .



இவர் சம்மாந்துறை பிரதேச செயலக உத்தியோகத்தர் ஆவார். விழாவில் தனியொரு கலைஞர் அதிகூடிய விருதுகளை பெற்றதும் இவரே என்பது குறிப்பிடத்தக்கது.

# அம்பாறை மாவட்ட இணைப்பாளராக வினோகாந்த் நியமனம்

வி.ரி சகாதேவராஜா

ஐக்கிய மக்கள் சக்தி கட்சியின் கல்வித்துறை அமைப்பான ஐக்கிய கல்வி ஊழியர் சங்கத்தின் அம்பாறை மாவட்ட இணைப்புச் செயலாளராக வெள்ளையன் வினோகாந்த் நியமிக்கப்பட்டுள்ளார். இவருக்கான நியமனக் கடிதத்தை, ஐக்கிய மக்கள் சக்தி கட்சியின் பொதுச் செயலாளர் ரஞ்சித் மத்தும பண்டார வழங்கி வைத்தார்.

அம்பாறை மாவட்ட கல்வித்துறை அபிவிருத்தியில், சங்கம் முனைப்போடு செயற்படுவதற்காக இந்த நியமனம் வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.



# கடை உடைத்து திருடியவர் கைது

செந்தூரன் பிரதீபன்

கடந்த எட்டாம் திகதி, சுன்னாகம் பஸ் நிலையத்துக்கு முன்னால் உள்ள தொலைபேசி கடையை உடைத்து, இலத்திரனியல் உபகரணங்கள் திருடப்பட்ட சம்பவம் தொடர்பில், புத்தூர் பகுதியைச் சேர்ந்த 24 வயதுடைய சந்தேக நபர் கைது செய்யப்பட்டுள்ளதாக சுன்னாகம் பொலிஸார் தெரிவித்தனர்.

கடை உரிமையாளரால் சுன்னாகம் பொலிஸ் நிலையத்தில் செய்யப்பட்ட முறைப்பாட்டின் அடிப்படையில், சந்தேக நபரை கைது செய்ததுடன் திருடிய பொருட்களையும் கைப்பற்றியுள்ளனர்.



# 50 லீற்றர் கசிப்புடன் 19 வயது இளைஞன் கைது

செந்தூரன் பிரதீபன்

காங்கேசன்துறை மாவட்ட விசேட குற்றத்தடுப்பு பொலிஸாரால் நேற்று (21) புத்தூர், வீரவாணி பகுதியில் வைத்து, 50 லிற்றர் கசிப்புடன் 19 வயது இளைஞன் கைது செய்யப்பட்டுள்ளார்.


உப பொலிஸ் பரிசோதகர் சத்துசங்க தலைமையிலான பொலிஸ் குழுவினர், வீரவாணி பகுதியில் உள்ள சந்தேக நபரின் வீட்டுக்கு பின்னால், 50 லிற்றர் கசிப்பைக் கைப்பற்றியிருந்ததுடன் கைதுசெய்யப்பட்ட சந்தேக நபரை அச்சுவேலி பொலிஸில் ஒப்படைத்தனர்.

# உடையார்கட்டில் கிறிஸ்து அரசர் தேவாலய அபிஷேக விழா

செ. கீதாஞ்சன்

புதுக்குடியிருப்பு பிரதேசத்துக்கு உட்பட்ட உடையார் கட்டு, குளக்கட்டு வீதியில் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட கிறிஸ்து அரசர் தேவாலயத்தின் அபிஷேக விழா ஞாயிற்றுக்கிழமை (20) சிறப்பாக நடைபெற்றது.

கிறிஸ்து அரசர் தேவாலய பங்கு மக்களின் நிதிபங்களிப்பில் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட தேவாலயத்தின் கொடியேற்றம் வெள்ளிக்கிழமை (18) நடைபெற்று, சனிக்கிழமை தேவநற்கருணை ஆராதனை இடம்பெற்று, ஞாயிற்றுக்கிமை தேவாலய அபிஷேக திருப்பலி யாழ். மறை மாவட்ட ஆயர் ஜஸ்ரின் பேனாட் ஞானப்பிரகாசம் ஆண்டகையால் ஒப்புக்கொடுக்கப்பட்டது.





மக்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் தொடர்பில்

# மக்களும் பொலிஸாரும் மாங்குளத்தில் சந்திப்பு

செ. கீதாஞ்சன்

முல்லைத்தீவு மாவட்டத்தில் மக்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் தொடர்பில் மக்களுக்கும் பொலிஸாருக்கும் இடையிலான சந்திப்பு, மாங்குளம் மகாவித்தியாலயத்தில் நடைபெற்றுள்ளது.

கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்ட பிரதி பொலிஸ்மா அதிபர் சமுத்திர ஜீவவின் ஒழுங்குபடுத்தலில் குறித்த கலந்துரையாடல் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. மாவட்டத்தில் இடம்பெறும் பெண்கள் மீதான துஸ்பிரயோகங்கள், பாடசாலை மாணவர்களின் கற்றல் இடைவிலகல், அதிகரிக்கும் போதைவஸ்து பாவனையும் அதனூடான சட்டவிரோத செயற்பாடுகள் பற்றியும் குறித்த கலந்துரையாடலில் மக்களால் கருத்துகள் முன்வைக்கப்பட்டன.

இதேவேளை, மாவட்டத்தில் இடம்பெறும் சட்டவிரோத செயற்பாடுகள் பற்றியும் பிரதேச



பொலிஸார் அசண்டையீனமாக இருப்பதாகவும் பிரதிப் பொலிஸ்மா அதிபரின் கவனத்துக்கு மக்களால் கொண்டுசெல்லப்பட்டது.

மக்களால் முன்வைக்கப்பட்ட குற்றச்சாட்டுக்கு பதிலளித்த பிரதிப் பொலிஸ்மா அதிபர், சம்பவங்கள் தொடர்பில் தான் கூடிய கவனம் எடுப்பதாகவும் முன் வைக்கப்பட்ட குற்றச்சாட்டுகளுக்கு ஒரு வாரத்துக்குள் தன்னால் நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் தெரிவித்தார்.

## போதை மாத்திரைகளுடன் இருவர் கைது

■ பாலித ஆரியவன்ஸ

பதுளை பிரதேசத்தில் பிரத்தியேக வகுப்புகளுக்குச் செல்லும் மாணவர்களை இலக்கு வைத்து, போதைப்பொருள் விநியோகிப்பவர்கள் என்ற சந்தேகத்தில் இளைஞர்கள் இருவர் கைதுசெய்யப்பட்டுள்ளனர். அவர்களிடமிருந்து 90 போதை மாத்திரைகளும் பதுளை பொலிஸாரல் கைப்பற்றப்பட்டுள்ளன.

பதுளை பொலிஸ் பிரிவின் புலனாய்வு பிரிவின் அதிகாரியொருவருக்கு கிடைத்த தகவலுக்கமைய, பதுளை, விகாரைகொட பகுதியில் முன்னெடுக்கப்பட்ட சோதனை நடவடிக்கையின் போது, சந்தேகநபர்கள் இருவரும் சிக்கியுள்ளனர்.

கைதுசெய்யப்பட்ட சந்தேகநபர்கள் இருவரும் பதுளை, வினீதகம பகுதியைச் சேர்ந்த 22, 27 வயதானவர்கள் என்றும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

## நகர சபை மண்டபத்திலுள்ள 2 சிலிண்டர்கள் மாயம்

■ சுதத்.எச்.எம்.ஹேவா

ஹட்டன்- டிக்கோயா நகர சபைக்குரிய டிக்கோயா நகர மண்டபத்தில் இருந்த இரண்டு சமையல் எரிவாயு சிலிண்டர்கள் காணாமல் போயுள்ளமை தொடர்பில் விசாரணைகள் முன்னெடுக்கப்பட வேண்டும் என, ஹட்டன்- டிக்கோயா நகர சபை உறுப்பினர் ஏ.பி அநுராத சில்வா தெரிவித்துள்ளார்.

குறித்த நகர மண்டபம் பல்வேறு நிகழ்வுகளுக்காக வழங்கப்பட்டு வருவதாகவும் இதன்போது உணவு தயாரிப்பிற்காக வைக்கப்பட்டிருந்த சமையல் எரிவாயு சிலிண்டர்கள் இரண்டே காணாமல் போயுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

மண்டபத்தை பராமரித்துக் கொள்வதற்காக, ஒருவர் நியமிக்கப்பட்டிருந்த நிலையில் சிலிண்டர்கள் காணாமல் போயுள்ளமை தொடர்பில் உரிய விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு, காணாமல் போயுள்ள சிலிண்டர்களுக்கான பணத்தை பொறுப்பானவரிடம் இருந்து அறவிடப்பட வேண்டும் என்றும் கோரினார்.

## சில மிளகாய்கள் கடும் 'உறைப்பு'

■ சுதத் எச்.எம். ஹேவா



ஹட்டன் பிரதேசத்தில் பச்சை மிளகாயின் விலை குறைந்துள்ள போதிலும், ஏனைய மிளகாய்களின் விலை அதிகரித்துள்ளன என நுகர்வோர் தெரிவிக்கின்றன.

கடந்த வாரங்களில் ஒரு கிலோ கிராம் 800 ரூபாய்க்கும் 1,000 ரூபாய்க்கும் இடைப்பட்ட விலையில் விற்பனை செய்யப்பட்ட பச்சை மிளகாய், தற்போது 400 ரூபாய்க்கும் 450 ரூபாய்க்கும் இடைப்பட்ட விலையில் விற்கப்படுகின்றன.

எனினும், ஏனைய மிளகாய்களின் விலை 2,000 ரூபாய் வரையிலும் அதிகரித்துள்ளன. போக்குவரத்து கட்டணங்கள் அதிகரிக்கப்பட்டுள்ளமையால் இவ்வாறு விலை அதிகரிக்கப்பட்டுள்ளது என வர்த்தகர்கள் சிலர் தெரிவிக்கின்றனர்.

### மூன்று கிராமங்களுக்கு

## செல்லும் வீதியின் நிலைமை



■ நவி

கம்பளை, உடுவெல்ல பிரதேசத்தில் இருந்து சுகதகம, விஜேகம, முஸ்வில் ஆகிய கிராமங்களுக்கு செல்லும் வீதி குன்றும் குழியுமாக காணப்படுகின்றது.

இந்த வீதியூடாக வாகனங்கள் மாத்திரமின்றி நடந்து செல்வதிலும் இக்கிராம மக்கள், பாரிய சிரமங்களை எதிர்நோக்கியுள்ளனர். இந்த வீதியூடாக பயணிக்கும் வாகனங்கள், ஒரு மாதத்தில் மூன்று நான்கு தடவை வாகனங்கள் பழுதடைந்து விடுவதாகவும் சாரதிகள் தெரிவிக்கின்றனர்.

### மலையத்துக்கு வரும் ஜனாதிபதி

# பிரச்சினைகளை தேடக்கூடாது

### மனோ கணேசன் எம்.பி கோரிக்கை



"இப்போது வடக்குக்கு போவதை போல், மலையகத்துக்கும், அரசியல் விஜயம் மேற்கொள்ள உள்ளதாகத் தெரிவித்துள்ள ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, மலையகத்துக்கு வந்து அங்கே என்ன சொல்ல, செய்ய போகிறார் என்பதை தெரிந்துக்கொள்ள நானும் ஆவலாக இருக்கிறேன்" என தமிழ் முற்போக்கு கூட்டணியின் தலைவர் மனோ கணேசன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் மனோ கணேசன் எம்பி மேலும் கூறியதாவது;

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, இந்திய வம்சாவளி மலையக தமிழர்களின் அரசியல் கோரிக்கைகள் தொடர்பிலும், இலங்கையிலேயே பின்தங்கிய பிரிவினராக ஐ.நா சபையும், உலக வங்கியும் அறிவித்துள்ள பெருந்தோட்ட மக்களின் வாழ்வாதார நிலைமைகள் தொடர்பிலும் காத்திரமான காரியங்களை செய்ய வேண்டும் என எதிர்பார்க்கிறேன்.

வடக்கு கிழக்குக்கு வெளியே வாழும் தமிழர்களின் அரசியல், சமூக, பொருளாதார, கலாசார பிரச்சினைகளின் 'தள வேறுபாடு' களை ஐக்கிய நாடுகள் சபையே இன்று புரிந்துகொண்டு எம்முடன் தனியாகப் பேசுகிறது. இதை ஜனாதிபதியும் புரிந்துகொண்டு எம்முடன் பேச வேண்டும் என அவரிடம் ஏற்கெனவே கூறி விட்டேன். ஆகவே வடகிழக்கு வெளியே வாழும் தமிழ் மக்கள், குறிப்பாக மலையக தமிழ் மக்கள் தொடர்பில், பிரதான தலைமை கட்சியான தமிழ் முற்போக்கு கூட்டணி நிச்சயமாக சாதகமாக நடந்துகொள்ளும்.

ஆகவே, ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, மலையகம் வந்து பிரச்சினைகளைத் தேடாமல், தீர்வுகளை அறிவிக்க வேண்டும் என எதிர்பார்க்கிறேன். அதுதான் துன்புறும் பெருந்தோட்ட மக்களை திருப்தியடையச் செய்யும். 200 வருடங்களாக உழைத்து நாட்டை உருவாக்கிய பெருந்தோட்ட மக்களின் இன்றைய நிலைமை பற்றி, சர்வதேச சமூகம் சொல்லுவதை கேட்டு நம்நாட்டு ஜனாதிபதி பெருந்தோட்ட மக்களிடம் மன்னிப்புதான் கேட்க வேண்டும். அதைச் செய்யாவிட்டாலும், இனி விசேட உணவு வழங்கல் மற்றும் ஒதுக்கீட்டு திட்டங்களை அவர் அறிவிக்க வேண்டும் என கோருகிறேன் என்றார்.



## 'தமிழோடு விளையாடு'

கம்பளை கல்வி வலயத்துக்குட்பட்ட நான்கு பிரதான தமிழ் பாடசாலைகளின் மாணவர்களுக்கிடையிலான வினாவிடைப்போட்டி - 2022 புஸ்ஸலாவை, சரஸ்வதி மத்திய கல்லூரியின் கலையரங்கத்தில் நடைபெற்றது.

சரஸ்வதி மத்திய கல்லூரி அதிபர் ஆர்.எஸ். ரவிசந்திரகுமார் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் பிரதம அதிதியாக கோட்டக்கல்விப் பணிப்பாளர் (கம்பளை கல்வி வலயம்) ஆர். உமேஸ்நாதன் அழைக்கப்பட்டிருந்தார்.

கௌரவ அதிதிகளாக கம்பளை சாஹிரா தேசிய கல்லூரி அதிபர் ஏ.எல். சிராஜ், புஸ்ஸலாவை இந்து தேசிய கல்லூரி அதிபர் எஸ். சந்திரமோகன், அயரி தமிழ் மகா வித்தியாலய அதிபர் சீலன் ஆகியோர் பங்கேற்றதுடன், கம்பளை கல்வி வலய உதவிப்பணிப்பாளர் ஜி. கிருஷ்ணபிள்ளை, கம்பளை இந்து கல்லூரி அதிபர் எஸ். ரகு ஆகியோரும் கௌரவ அதிதிகளாக அழைக்கப்பட்டிருந்தனர்.

சிறப்பு அதிதிகளாக கம்பளை கல்வி வலய ஆசிரிய ஆலோசகர் ஏ.எஸ். எழில்பிரியா, சரஸ்வதியன்ஸ் பழைய மாணவர் சங்கத்தின் செயலாளரும், ஊடகவியலாளருமான பா. திருஞானம், சமூக சேவையாளர் எஸ்.வி. பிரசன்னா, சமூக ஆர்வலரும், கைப்பணி கலைஞருமான எஸ். மகேந்திரன் ஆகியோர் பங்கேற்றனர்.

ஆரம்பம் முதல் இறுதிவரை மிகவும் பரபரப்பாகவும், விறுவிறுப்பாகவும் நடைபெற்ற இப்போட்டியில் பங்கேற்ற மாணவர்களும் தமது திறமைகளை உரிய வகையில் வெளிப்படுத்தினர்.



## உதவிக்கரம்

ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் நுவரெலியா மாவட்டத்தின் அமைப்பாளர் மற்றும் விஷ்ணு ஆரோகணம் சமூக சேவை மன்றம், மலரும் மலையகத்தின் ஸ்தாபக தலைவர் கலாநிதி சதாநந்தன் திருமுருகனின் தலைமையில், கொத்மலை பொல்வத்துற பகுதியையைச் சேர்ந்த சுமார் 160 மாணவர்களுக்கு போசனைப் பொருட்கள் வழங்கி வைக்கப்பட்டன.

## மாட்டிறைச்சி கடையை தடுத்து நிறுத்திய ஜீவன்

■ ஆ.ரமேஸ்



டிக்கோயா, புளியாவத்தை நகரில் மாட்டிறைச்சி கடைக்கான அனுமதி பாராளுமன்ற உறுப்பினர் ஜீவன் தொண்டமானால் இரத்துச் செய்யப்பட்டுள்ளது.

புளியாவத்தை நகரில் மாட்டிறைச்சி வர்த்தக நிலையத்தை அமைப்பதை தடைசெய்யுமாறு, புளியாவத்தை பிரதேச மக்கள் ஜீவனின் கவனத்துக்கு கொண்டு வந்தனர்.

புளியாவத்தை நகரில் உள்ள ஆலயத்துக்கு அருகில் குறித்த இறைச்சி கடையை அமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்ட போதே, மக்கள் அதற்கு எதிர்ப்பினை தெரிவித்துள்ளனர்.

நோர்வூட் பிரதேச சபையால் புளியாவத்தை நகரில் மாட்டிறைச்சி அமைக்க விலைமனு கோரப்பட்டிருந்தது.

இதற்கமைய, நபரொருவர் 15 இலட்சம் ரூபாய் பணத்தை நோர்வூட் பிரதேச சபைக்கு செலுத்திய நிலையிலேயே, ஜீவன் தொண்டமான் நோர்வூட் பிரதேச சபை விடுத்துள்ள மாட்டிறைச்சி கடைக்கான விலைமனு கோரலை நிறுத்தி, பெறப்பட்ட 15இலட்சம் ரூபாயை உரியவரிடம் கையளிக்குமாறு தவிசாளர் குழந்தை ரவிக்கு பணித்துள்ளார்.

### நுவரெலியாவில் பிரதான இடங்களில்

## சிங்களத்தில் மட்டும்

■ டி.சந்ரு

அதிகமான உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகள் வருகை தரும் நுவரெலியாவின் சில இடங்களில் சிங்கள மொழியில் மாத்திரம் அறிவிப்பு பலகைகள் காட்சிப்படுத்தப்பட்டுள்ளன.

குறிப்பாக நுவரெலியா- பதுளை வீதியின் இரண்டு இடங்களில் இவ்வாறு அறிவிப்பு பலகைகள் காட்சிப்படுத்தப்பட்டுள்ளன.

நுவரெலியா தனியார் பஸ் உரிமையாளர்கள், சாரதிகள் மற்றும் நடத்துநனர்களின் வேண்டுகோளுக்கு இணங்க, தூர பிரதேசங்களில் இருந்து நுவரெலியாவுக்கு பயணிக்கும் தனியார் பஸ்கள், நுவரெலியா பிரதான பஸ் தரிப்பிடத்திற்குள் உள்ளே நிறுத்தப்படாமல் நுவரெலியா - பதுளை பிரதான வீதியில் பஸ் நிறுத்துவதற்கு தனியான இடம் ஒதுக்கப்பட்டுள்ளது.




எனினும் இவ்விடத்தில் சிங்கள மொழியில் மாத்திரம் அறிவிப்பு பலகை வைக்கப்பட்டுள்ளதால் சிங்கள மொழி தெரியாதவர்களின் வாகனங்கள் நிறுத்தப்பட்டால் உடனடியாக போக்குவரத்து பொலிஸார் அபராதம் விதிப்பதாகவும் பாதிக்கப்பட்ட சாரதிகள் தெரிவிக்கின்றனர்.

## வரிகளை குறைத்து அறவிட கோரிக்கை

■ ஆ.ரமேஸ்.

பொருளாதார நெருக்கடி காரணமாக அன்றாட வாழ்க்கையை கொண்டு நடத்துவதில் பெரும் சிரமங்களுக்கு முகக்கொடுக்கும் மக்களிடம் அறவிடப்படும் வரிகளை குறைத்து அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டும் என நுவரெலியா மாநகர சபையின்உறுப்பினர் எஸ். சிவரஞ்சனி கேட்டுக்கொண்டார்.

நுவரெலியா மாநகர சபை அதிகாரத்துக்கு உட்பட்ட பிரதேச மக்களின் வாழ்க்கை நிலை தொடர்பில் ஞாயிற்றுக்கிழமை (20) காலை கருத்து தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

பொருட்களின் விலை அதிகரிப்பு, வரி அதிகரிப்பு வாழ்க்கை சுமை என மக்களின் மீது திணிக்கப்பட்டுள்ள நிலையில், நுவரெலியா மாவட்டத்தில் குறைந்த வருமானம் பெறும் தோட்டத் தொழிலாளர்கள், கூலிவேலை செய்வோர் அதிகமாக பாதிப்புக்கு உள்ளாகியுள்ளனர் என்றார்.

### போதைப்பொருள் பாவனையிலிருந்து

## மாணவர்களை மீட்டெடுத்தல்

### கொட்டகலையில் கலந்துரையாடல்

■ எஸ்.கணேசன்



கொட்டகலை பிரதேசத்தில் உள்ள பிரதான பாடசாலைகளில் கல்வி பயிலும் பாடசாலை மாணவர்களை இலக்கு வைத்து போதைப்பொருள் பாவனை மற்றும் போதைப்பொருள் விற்பனை செய்பவர்களிடமிருந்து பாடசாலை மாணவர்களை மீட்கும் வேலைத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

கொட்டகலை ஐக்கிய வர்த்தக சங்கத்தின் தலைவர் புஷ்பா விஸ்வநாதன், நுவரெலியா மாவட்ட உதவி பொலிஸ் அத்தியட்சகர் ஆகியோரின் தலைமையில் கொட்டகலை ஸ்ரீ முத்து விநாயகர் இந்து ஆலய மண்டபத்தில் இந்த வேலைத்திட்டத்தின் ஆரம்பக்கட்ட கலந்துரையாடல் ஞாயிறுக்கிழமை (20) மாலை நடைபெற்றது.

இக்கலந்துரையாடலில், அவ்வாறான மாணவர்கள் இனங்காணப்பட்டு, அந்த மாணவர்களை வகுப்புகளுக்கு தடைவிதித்து, அதற்கமைவாக, போதைப்பொருள் பாவனையிலிருந்து ஏனைய மாணவர்களை காப்பாற்ற, பெற்றோரின் ஆதரவுடன் திட்டம் முன்னெடுக்கப்பட வேண்டுமென, அதிபர்கள் மற்றும் ஆசிரியர்கள் கோரிக்கைகளையும் முன்வைத்தனர்.

நாட்டில் நிலவும் பொருளாதார நெருக்கடி காரணமாக பிரதான பாடசாலைகள் மற்றும் தோட்டப்புற பாடசாலைகளில் 6 ஆம் ஆண்டு முதல் 11 ஆம் ஆண்டு வரையிலான வகுப்புகளில் உள்ள மாணவர்களின் வருகைப்பற்றாக்குறை காணப்படுவதாகவும், அந்த மாணவர்களும் போதைப்பழக்கத்திற்கு அடிமையாகியுள்ளதாகவும் தகவல்கள் கிடைத்துள்ளதாக இதன்போது அதிபர்கள் சுட்டிக்காட்டினர்.

அத்தோடு, கொட்டகலை நகரில் உள்ள குறிப்பிட்ட சில மருந்துக் கடைகளில் (பாமசி) பாடசாலை மாணவர்களுக்கு போதை மருந்துகளை விற்பனை செய்வதாகவும், போதைப்பொருளை வாங்கி, பாடசாலைக்கு வந்து மிக இரகசியமாக போதைப்பொருட்களை அருந்துவதாகவும் அதிபர்கள் இதன்போது தெரிவித்தனர்.

இக்கலந்துரையாடலில் அதிபர்கள், ஆசிரியர்கள், நலன்விரும்பிகள் ஆகியோர் தெரிவித்த கருத்துகளின் அடிப்படையில், இந்தப் போதைப்பொருள் பழக்கத்திலிருந்து மாணவர்களை விடுவிக்கவும், சமூகத்தை பாதுகாப்பதற்காகவும், அது தொடர்பாக ஆராய்வதற்கான குழுக்களை நியமிக்கவும் நடவடிக்கைகள் எடுக்கவுள்ளதாக கொட்டகலை ஐக்கிய வர்த்தக சங்கத்தின் தலைவர் புஷ்பா விஷ்வநாதன் தெரிவித்ததோடு, போதைப்பொருள் விற்பனை செய்யும் நபர்களை பற்றி பொலிஸாருக்கு தகவல்களை வழங்க, பொது மக்கள் உதவி செய்ய வேண்டும் என நுவரெலியா மாவட்ட உதவி பொலிஸ் அத்தியட்சகர் தனது உரையில் கோரிக்கையும் முன்வைத்தார்.

# பறக்கும் கனவில் வாழ்க்கையையே பாழாக்கி விடாதீர்கள்

இப்படிதான் வாழவேண்டுமென திட்டமிட்டு வாழ்ந்த காலம் மலையேறி பலமாதங்கள் கடந்துவிட, இன்றைய பொழுதை எவ்வாறு சமாளிப்பது என்ற சிந்தனையே பலரிடம் சூழ்கொண்டுள்ளது. அந்தளவுக்கு பல பக்கங்களில் இருந்தும் வரும் நெருக்கடிகள் நெருக்கிக்கொண்டே இருக்கின்றன.

வரவுக்கு மிஞ்சிய செலவுகளைக் கட்டுப்படுத்த முடியாது, பலரும் திணறிக்கொண்டிருக்கின்றனர். மேலதிக வருமானத்துக்கான வேலைகளும் இலகுவாக கிடைப்பதில்லை. இருக்கும் தொழிலை செய்துகொண்டு காலத்தை கடத்துவதிலேயே இன்னும் சிலர் குறியாக இருக்கின்றனர்.

இங்கிருந்தால் வாழமுடியாது என்றெண்ணிய பலரும், வெளிநாடுகளுக்கு பறந்துவிட்டனர். இன்னும் பெரும்பாலானோர், அதற்காக முயன்று கொண்டிருக்கின்றார்கள். சிலர் தப்பிக்கொண்டனர். இன்னும் சிலர் சிக்கிக்கொண்டு வாழ்க்கையையே பாழாக்கி விட்டனர். ஏமாற்று பேர்வழிகளிடம் சிக்கிக்கொண்டவர்கள் பலர்.

வெளிநாடுக்குச் செல்வதாக தீர்மானித்துவிட்டால், அதற்கான உரிய ஆவணங்களைத் தயார்செய்து, பதிவு செய்யப்பட்ட வெளிநாட்டு முகவர் நிலையங்களை நாடவேண்டும். காதுகளுக்கு இனிப்பை ஊட்டி, கனவுலகத்துக்கு இழுத்துச் சென்று உள்ளதையெல்லாம் கரைத்து நடுவீதியில் திரியவிடும் போலி முகவர்கள் தொடர்பில் அவதானமாகவே இருக்கவேண்டும்.

ஓமானுக்கு பணிப்பெண்களாக அனுப்புவதாகக் கூறி, இளம்பெண்களை பாலியல் தொழிலுக்காகவும், செல்வந்த பேர்வழிகளிடம் விற்ற சம்பவம் தொடர்பில் கிடைக்கும் முறைப்பாடுகள் அதிகரித்துள்ளன. அங்கு சிக்கிக்கொண்ட இலங்கை பெண்களை மீட்டெடுக்கும் முயற்சியில் இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம் ஈடுபட்டுள்ளது.

சுற்றுலா விசாவில் அழைத்துச் சென்றே, இவ்வாறு பாலியல் அடிமைகளாக விற்றுள்ளமை விசாரணைகளின் ஊடாக கண்டறியப்பட்டுள்ளது. இந்நிலையில், ருமேனியாவுக்கு வேலைவாய்ப்பு பெற்றுத்தருவதாக கூறி, நேர்காணல் செய்தவர்களில் நால்வர் கைது செய்யப்பட்டுள்ளனர். தங்களுடைய வாழ்க்கையை கொஞ்சமேனும் முன்னேற்றிக்கொள்ள வேண்டும்; குடும்பத்தை காப்பாற்றவேண்டும்; பிள்ளைகளுக்கு நல்ல கல்வியைக் கொடுக்கவேண்டும் என்ற கனவுகளுடன் வெளிநாடுகளுக்கு தொழில்வாய்ப்புகளை தேடியலைவோரில் பலர், ஏமாற்று கும்பலிடம் சிக்கி, இருப்பதையும் இழந்து நிற்கின்றனர்.

பொருளாதார நெருக்கடிகள் கழுத்தை நெரித்துக்கொண்டு செல்கையில், அதிலிருந்து மீண்டெழ வேண்டுமாயின், வெளிநாடுகளுக்கு வேலைக்காக செல்வதைத் தவிர, மாற்று வழிகளே இல்லையென நினைக்கும் பலரும், அனுமதிபெற்ற முகவர்களை நாடினால், இலகுவாக பயணிக்கலாம்.

உரிய ஆவணங்கள் இல்லாதவர்களுக்கு போலி ஆவணங்களைத் தயாரித்து, பணத்தையும் கறந்துகொண்டு போலி முகவர்கள் நடுவீதியில் விட்டுவிட்டுச் சென்றுவிடுவர். ஆகையால், பசப்பு வார்த்தைகளை நம்பி ஏமாந்துவிடாதீர்கள் என்பதை மீண்டும் வலியுறுத்துகின்றோம்.

அவற்றுக்கு அப்பால், வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியக அதிகாரிகள், நாட்டிலுள்ள ஒவ்வொரு முகவர் நிலையங்கள், இணை நிலையங்கள் குறித்து தகவல்களைத் திரட்டி, அவ்வப்போது திடீர் சுற்றிவளைப்புகளை மேற்கொள்ளவேண்டும். அதனூடாகவே போலி முகவர்கள், ஏமாற்று பேர்வழிகளிடம் இருந்து சாதாரண மக்களை பாதுகாக்க முடியும்.

தமிழ்Mirror www.tamilmirror.lk க்கு
எழுதுங்கள்




தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருதுகளையும் வரவேற்கின்றோம்.

அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.

அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136

Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk






## வாழ்வியல் தரிசனம்

சிலவிடயங்களைக் கண்டபடி ஆராயாமல், சும்மா இருப்பதுவே நல்லது. நெஞ்சத்தைக் கசக்குவது புத்திசாலித்தனமானது அல்ல!

சில சமயங்களில் பெரிய பிரச்சினைகள் கூடத் தானாகவே கரைந்துவிடுகின்றன. சிலர் அற்பவிடயங்களை ஊதிப்பெருப்பித்து விடுவதுண்டு. முடிவைக் கண்டுபிடிக்க அவசரம் காட்டாமல், அமைதிக்கு இடம்கொடுங்கள். இதயத்தை மௌனமாக வைத்திருந்து, அதன் பின்னர் மூளையைப் பிரயோகியுங்கள். நல்ல முடிவுகள் தானாகவே உருவாகிவிடும். அவசரம், மூளைக்கு இடமளிக்காது என்பதை உணர்க! அநேகமானவர்கள் அற்ப விடயங்களுக்குப் பெரிதாகக் கற்பனை செய்வார்கள். வேலைகளை அதிகமாகச் செய்து, சிலசமயம் களைப்பின் இயலாமையால் கோபம் வந்துவிடுகின்றது. படிப்படியாகச் செய்யும் கருமங்கள், தொல்வியடைவதில்லை. தேகம் இரும்பால் ஆனதில்லை.

எல்லாமே பெரிய கஸ்டமானது; எதையும் செய்யமுடியாது என எண்ணினால் உலகம் எப்படி இயங்கும். எல்லோரும் இணைந்து செயலாற்றும்போதுதான், உலகத்தை இயங்க வைக்கமுடியும்.

பருத்தியூர் பால. வயிரவநாதன்

## கடிதங்கள்

கொல்லனாற்று சின்னப்பாலத்தில்

### தடுப்புக் கட்டுகள் அமைக்குமாறு கோரிக்கை

மூதூர், கொல்லனாற்று சின்னப்பாலத்தின் இரு பக்கமும் கட்டப்பட்டுள்ள தடுப்புக் கட்டுகள் உடைந்து, பெரும் சேதமடைந்து காணப்படுகின்றன. இதனால் இப்பாலத்தின் ஊடாகப் பயணம் செய்யும் பொதுமக்களின் பாதுகாப்புக் குறித்த அச்சம் நிலவுகின்றது.

மூதூர் அல் நஹார் மகளிர் மகா வித்தியாலயம், புனித அந்தோனியார் மகா வித்தியாலயம் ஆகிய பாடசாலை உள்ளிட்ட பல்வேறு அரச அலுவலங்களுக்குமான போக்குவரத்து செய்யும் மின்சார நிலைய வீதியின் மத்தியில் இப்பாலம் அமைந்துள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

மேலும், இப்பாலத்தை கடந்து பாடசாலை செல்லும் மாணவர்கள், பொதுமக்கள், பிரயாணிகள், வாகன போக்குவரத்து தினமும் இடம்பெற்று வருவதால், எதிர்பாராத ஆபத்துகள் ஏற்படலாம் என்பதால், பொதுமக்கள் தமது உயிருக்குப் பாதுகாப்பை ஏற்படுத்துமாறு கோருகின்றனர்.

இந்நிலையில், பாலத்தின் இருபக்க தடுப்புச் சுவர்களும் பல வருட காலமாக சேதமுற்று காணப்படும் நிலையில், பலரும் பெரும் அச்சமடைந்து பயணிக்கும் நிலையில், உரிய அதிகாரிகளுக்கு அறிவித்தும் இதற்கான பாதுகாப்பு தடுப்புக் கட்டுகள் அமைக்கப்படவில்லை எனவும் மக்கள் பெரும் விசனம் தெரிவிக்கின்றனர்.

எனவே, பொதுமக்கள் அச்சமுறுவது போன்று ஆபத்து ஒன்று நிகழமுன்னர், பாதுகாப்பு தடுப்புக் கட்டுகளை பொறுப்புக்கூற வேண்டிய உரிய தரப்பினர் அமைத்துத் தரவேண்டும் என்று கோரிக்கை முன்வைக்கப்படுகின்றது.

எப். முபாரக்

முஸ்லிம் தரப்புக்கு

# ஆயிரத்தோராவது வாய்ப்பு

**மொஹமட் பாதுஷா**

‘ஒன்றுமே செய்யாமல் அல்லது பெற்றுக்கொள்ளாமல் இருப்பதை விட, சிறியதாகவேனும் எதையாவது செய்வது அல்லது பெற்றுக்கொள்வது சிறந்தது’ என்று, ஆங்கிலத்தில் ஒரு பழமொழி இருக்கின்றது. இது வேறு எதற்குப் பொருந்தாவிட்டாலும் கூட, நமது அரசியலுக்கு மிகப் பொருத்தமானதாகும்.

‘செய்ய முடியாதவற்றை எல்லாம் செய்யும் கலைதான் அரசியல்’ என்று சொல்வதுண்டு. ஆனால், அப்படிச் சொன்னவர்களில் அதிகமானவர்கள், செய்யக் கூடியவற்றைக் கூட செய்யாமல்தான் காலத்தை வீணடித்து விட்டுப் போயிருக்கின்றார்கள்; இதுதான் யதாத்தம்!

ஆயிரத்தெட்டு வாக்குறுதிகளைக் கூறி, பலநூறு நம்பிக்கைகளைக் கொட்டி, மக்களின் வாக்குகளைப் பெற்றவர்கள், அவற்றில் ஒருசிலவற்றைக் கூட நிறைவேற்றாமலேயே தமக்கான அரியணையில் இருந்து இறங்கிப் போனதை நாம் கண்டிருக்கின்றோம்.

இலங்கை அரசியலில் பல வாக்குறுதிகள், தேர்தல் விஞ்ஞாபனங்கள், கொள்கைப் பிரகடனங்கள் அவற்றை நிறைவேற்ற வேண்டும் என்ற உண்மையான எண்ணத்தோடு வெளியிடப்படுவதில்லை. தமது சுயலாப அரசியல் எனும் கல்லாப்பெட்டி நிரம்பும் வரை, மக்களை பராக்குக் காட்டுவதற்கான ஓர் ஆயுதமாகத்தான் இது பயன்படுத்தப்பட்டு வருகின்றது.

குறிப்பாக, முஸ்லிம் சமூகத்தை மையப்படுத்திய அரசியலில், இந்த ஏமாற்றுத்தனத்தை வெகுவாகக் காணலாம். முஸ்லிம் அடையாள அரசியலை முன்னிறுத்தும் முஸ்லிம் கட்சிகளின் தலைவர்கள், எம்.பிக்கள் மட்டுமன்றி, ஐக்கிய தேசிய கட்சி, சுதந்திரக் கட்சி, பொதுஜன பெரமுன என எல்லாக் கட்சிகளையும் சேர்ந்த முஸ்லிம் எம்.பிக்களின் போக்கும், இதுவன்றி வேறொன்றுமில்லை.

பதினாறு இலட்சத்துக்குக் குறைவில்லாத வாக்காளர்களைக் கொண்ட, 22 இலட்சம் முஸ்லிம்களின் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கும், அபிலாஷைகளை முன்னிறுத்துவதற்கும், அதன்மூலம் ஒரு தனித் தேசிய இனமாக முஸ்லிம் சமூகத்தை அடையாளப்படுத்துவதற்கும், கடந்தகாலத்தில் பல வாய்ப்புகள் கிடைத்தன.

மறைந்த தலைவர் எம்.எச்.எம். அஷ்ரப் அந்த வாய்ப்புகளைக் கொஞ்சம் பயன்படுத்தினார். அதற்குப் பிறகு, வேறு எந்த முஸ்லிம் தலைவரோ, எம்.பிக்களோ இந்த வாய்ப்புகளைக் கனகச்சிதமாகப் பயன்படுத்தவில்லை.

சந்திரிகா அம்மையாரின் இரண்டாவது ஆட்சிக்காலம் தொடக்கம், ராஜபக்ஷர்களின் ஆட்சிக்காலம் வரை, பல சந்தர்ப்பங்கள் முஸ்லிம்களுக்கு கிடைத்தன. இவற்றை இரண்டு வகையாக பார்க்கலாம்.

ஒன்று, முஸ்லிம்கள் தமது பிரச்சினைகளை தீர்ப்பதற்காகப் பேரம் பேசும் சக்தியைப் பயன்படுத்துவதற்கான வாய்ப்பு.

இரண்டாவது, சமூகத்துக்குப் பாதகமான சட்டமூலங்கள், யாப்புத் திருத்தங்கள், அரசியல் நகர்வுகளை கூட்டாக எதிர்ப்பதற்கான வாய்ப்பு.

துரதிர்ஷ்டவசமாக இவை இரண்டு வாய்ப்புகளுமே பயன்படுத்தப்படாமல் நழுவவிடப்பட்டன. சில முஸ்லிம் அரசியல் ‘டீலர்’கள் இதனை தமது சுய இலாபத்துக்காகப் பயன்படுத்திக் கொண்ட கதைகளும் உள்ளன.

சிங்கள ஆட்சியாளர்கள் ஒரு காலத்திலும் தமிழர்கள், முஸ்லிம்கள் என்ற இரண்டு சிறுபான்மை இனங்களையும் ஒரே மாதிரிக் கையாண்டதில்லை. இரண்டு சமூகங்களோடும் சமகாலத்தில் உறவு கொண்டாடியதும் இல்லை; பகைத்துக் கொண்டதும் இல்லை. இரண்டு இனங்களின் விவகாரங்களில் ஒரே காலப்பகுதியில் சமஅளவு கரிசனை காட்டியதும் இல்லை.

அதுபோலத்தான், முஸ்லிம் அரசியலையும் ஆட்சியாளர்கள் கையாண்டு வருகின்றார்கள். நாட்டு மக்களைப் பிரித்தாளுவது போலவே, முஸ்லிம் அரசியல் அணிகளையும் பிரித்தாளுவதன் ஊடாக, முஸ்லிம்களுக்கான அரசியல் பலம் பெறுவதை, மூலோபாய ரீதியாக தடுத்து வருகின்றார்கள். ஜனாதிபதி ரணிலும் பெருந்தேசியத்தின் செல்லப் பிள்ளைதான் என்பதையும், இதற்கு முன்னர் அவர் அதிகாரத்தில் இருந்த காலத்தில், சிறுபான்மையினரின் பிரச்சினைகளை முற்றுமுழுதாகத் தீர்த்து வைத்தார் எனவும் கூற முடியாது.

ஆனாலும், ஒரு நிர்ப்பந்த சூழல் காரணமாக, தமிழர்களை நோக்கிய ஒரு மென்போக்கை அரசாங்கம் தற்போது கடைப்பிடித்து வருகின்றது. இந்நிலையில், அடுத்த சுதந்திர தினத்துக்குள் தமிழ் மக்களின் பிரச்சினையை தீர்ப்பதாகவும் அதற்காக தமிழ் அரசியல்வாதிகளுடன் பேச்சு நடத்த உள்ளதாகவும், ஜனாதிபதி அண்மையில் நாடாளுமன்றத்தில் அறிவித்தார்.

காணிப் பிரச்சினைகள் தொடர்பாக, தமிழ்த் தரப்புகள் தொடர்ச்சியாகப் பேசி வருகின்றன. வடக்கில் காணி அபகரிப்புகள் இடம்பெறுவதாகவும் ஆக்கிரமிக்கப்பட்ட காணிகள் மீளஒப்படைக்கப்பட வேண்டும் என்றும் கோரியுள்ளன. இந்நிலையில், காணி விவகாரம் பற்றி ஆராய, எட்டு குழுக்களை நியமிப்பதாக ஜனாதிபதி அறிவித்துள்ளார்.

வடக்குக்குச் சென்ற ஜனாதிபதி, வவுனியாவில் ஜனாதிபதி செயலகத்தின் ஒருங்கிணைப்பு உபஅலுவலகத்தைத் திறந்துவைத்துள்ளார். அத்துடன் புலம்பெயர்ந்தோருக்கான அலுவலகத்தை அடுத்த மாதம் திறப்பது தொடர்பாகவும் அரசாங்கம் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றது.

நாட்டில் இன்னும் இனவாதமும் இனப்பாகுபாடும் முற்றாக அழிந்து விடவில்லை. சரத் வீரகேசர போன்றோரின் கருத்துகள் இவற்றுக்கு நல்ல பதச்சோறாகும். இவ்வாறிருக்க, பசிலும் நாடு திரும்பியுள்ளார்.

இவ்வாறான சூழமையில், தமிழ் மக்களின் எதிர்பார்ப்புகள் முழுமையாக நிறைவேறும் என்று சொல்வதற்கில்லை. இருப்பினும், ஒரு சில பிரச்சினைகளாவது தீர்க்கப்படும் என்ற நம்பிக்கை பரவலாக ஏற்பட்டுள்ளது.

ஆனால், இது விடயத்தில் முஸ்லிம் சமூகம் எந்த இடத்தில் நிற்கின்றது? மீண்டும் கிடைத்திருக்கின்ற சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி முடியுமானவற்றுக்கு தீர்வுகாண தமிழ் அரசியல்வாதிகள் முன்னிற்பது போல, முஸ்லிம் அரசியல்வாதிகள் முயலுகின்றார்களா?

அரசாங்கங்கள், தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்கு முக்கியத்துவம் கொடுக்கும் போக்குக்கு, ஆயுதப் போராட்டம் காரணம் என்று சொன்னால் அதை ஏற்க முடியாது. ஏனெனில், தமிழ் மக்களின் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கான அரசியல் ரீதியான முன்னெடுப்புகள், ஆயுத மோதலுக்கு முன்னரும் இருந்தன, யுத்தம் முடிவடைந்த பிறகும் நீளுகின்றன.

ஆகவே, அரசியல் நகர்வுகள், ஒருமித்த நிலைப்பாடு, பிரச்சினைகள் உலக அரங்குக்கு கொண்டு செல்லப்பட்டமை எனப் இதற்குப் பின்னால் பல காரணங்கள் உள்ளன. இதைப் பார்த்து, மலையக அரசியல்வாதிகளும் தற்போது மலையக மக்களின் பிரச்சினைகளை முன்கொண்டு செல்ல முனைவதை அவதானிக்க முடிகின்றது.

உண்மையில், முஸ்லிம் கட்சிகள் மட்டுமன்றி, பெரும்பான்மைக் கட்சிகளில் அங்கம் வகித்த, வகிக்கின்ற முஸ்லிம் எம்.பிக்களும் இதையெல்லாம் எப்போதோ செய்திருக்க முடியும். அதன்மூலம் முஸ்லிம் சமூகத்தின் ஒன்றிரண்டு பிரச்சினைகளையாவது தீர்த்து வைத்திருக்கலாம். ஆனால் அது இதுவரை நடக்கவில்லை.

அடையாள அரசியல், இணக்க அரசியல் எனச் சொல்லிக் கொண்டு, முஸ்லிம் கட்சிகள் மட்டுமன்றி பெரும்பான்மைக் கட்சிகளைச் சேர்ந்த முஸ்லிம் எம்.பிக்களும் அரசாங்கம் அல்லது பெருந்தேசியத்துக்கு முட்டுக் கொடுக்கின்ற வேலையைத்தான் தொடர்ச்சியாகச் செய்து வருகின்றன.

தமிழ் அரசியல்வாதிகளை விட, முஸ்லிம் அரசியல்வாதிகள் அரசாங்கத்துடன் நேரடியாகவும் மறைமுகமாகவும் பலமான உறவை கொண்டாடி வந்தனர்; வருகின்றனர். அப்படியென்றால், எவ்வளவோ விடயங்களைச் சாதித்திருக்க முடியும். எத்தனையோ பிரச்சினைகளை தீர்த்திருக்க முடியும். ஆனால், வாய்ப்புக்கள் தவற விடப்பட்டனவே தவிர, முஸ்லிம் சமூகத்துக்காக அவை சரிவரப் பயன்படுத்தப்படவில்லை.

இந்த தொங்குநிலை அரசாங்கமும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவும் இன்னும் எவ்வளவு காலத்துக்குப் பதவியில் இருக்கப் போகின்றார்கள்? ஆனால், ‘காற்றுள்ளபோது தூற்றிக் கொள்ள வேண்டும். ஆயிரத்தோராவது தடவையாக கிடைத்திருக்கின்ற வாய்ப்பையேனும் தவறவிடாது, சிறிய பிரச்சினைகளையாவது தீர்த்துக் கொள்வதே நல்ல அரசியலுக்கு அழகாகும்.

இந்த நாட்டில் முஸ்லிம் மக்களுக்கும் பிரத்தியேக பிரச்சினைகள் உள்ளன. அவற்றை நாம் தீர்த்து வைப்போம் என்று ஜனாதிபதியோ அரசாங்கமோ அறிவிக்கவில்லை. இதற்குக் காரணம், முஸ்லிம் தலைவர்களும் எம்.பிக்களும் என்று கூறுவதுதான் சரி! அவர்கள் சமூகத்தின் பிரச்சினைகளை முறையாக முன்வைக்கவில்லை. இதனால், இந்த நாட்டில் முஸ்லிம்களுக்கு பிரச்சினைகளே இல்லை என்பது போன்ற பிம்பமே கட்டமைக்கப்பட்டுள்ளது.

இப்போதுகூட அதுதான் நடக்கின்றது.

கிடைத்திருக்கின்ற குறுகியகால வாய்ப்பைப் பயன்படுத்தி எதையாவது சாதித்துக் கொள்வோம் என்று வடக்கு, கிழக்கு, மலையக தமிழ் அரசியல் சக்திகள் முனைப்புக் காட்டிக் கொண்டிருக்க, முஸ்லிம் அரசியல்வாதிகள், ‘பிடில்’ வாசித்துக் கொண்டு காலத்தை வீணாக்கிக் கொண்டிருக்கின்றனர்.

மார்ச்சில் நடைபெறவுள்ள உள்ளூராட்சித் தேர்தலிலும் அதற்குப் பின்னர் நடைபெறும் தேர்தல்களிலும் எப்படிப் போட்டியிடுவது என்பதற்கான வியூகங்களை அமைப்பதிலேயே முஸ்லிம் கட்சிகளும் அரசியல் அணிகளும் முழுக் கவனத்தையும் குவித்துள்ளன. சில அரசியல்வாதிகள் மட்டும் இப்போதுதான் தூக்கம் கலைத்து பேசத் தொடங்குகின்றனர்.

இப்போது நமக்குக் கிடைத்திருக்கின்ற சந்தர்ப்பத்தை பயன்படுத்தி, முஸ்லிம்களின் நீண்டகால பிரச்சினைகளை முறையாக முன்வைத்து, அதில் ஒரு சிலவற்றுக்காவது தீர்வு கண்டுகொள்ள வேண்டும் என்ற முனைப்பையும், அதற்காகவேனும் முஸ்லிம் அரசியல் அணிகள் ஒன்றுபட்டுச் செயற்படுகின்ற போக்கையும் மருந்துக்குக் கூட காண முடியாதுள்ளது.

இந்நிலை மாறவேண்டும். இந்த அரிய தருணத்தைச் சாதகமாகக்கிக் கொண்டு, மூன்று முஸ்லிம் கட்சிகளும் அரசியல் அணிகளும் மட்டுமன்றி, பெரும்பான்மைக் கட்சிகளில் உள்ள முஸ்லிம் எம்.பிக்களும் தமது சமூகத்தின் பிரச்சினைகளுக்கு தீர்வு காண முற்பட வேண்டும்.

அப்படிச் செய்யவில்லை என்றால், கடந்த காலங்களைப் போலவே இந்தக் காலமும் முஸ்லிம் சமூகத்துக்கு எந்தவிதமான உபயோகமும் இன்றி, ஆயிரத்து ஓராவது தடவையாக, வீணே கழிந்து போகும்.

மத்திய பிரதேசம்

# மனித முகத்துடன் பிறந்த ஆட்டுக்குட்டி





மத்திய பிரதேசம் மாநிலம், விதிஷா மாவட்டத்தில் உள்ள ஒரு கிராமத்தில், மனித முகத்துடன் ஆட்டுக்குட்டி அண்மையில் பிறந்த சம்பவம் உள்ளூர்வாசிகளிடையே அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

இவ் ஆட்டுக்குட்டியின் முகம் முழுவதும் ரோமங்கள் இருந்தாலும் இதன் கண்கள் அமைந்துள்ள விதம் மனித முகத்துடன் ஒத்துக் காணப்படுவதாகவும் குறிப்பாக, அதன் கண்களைச் சுற்றி இருக்கும் கருவளையமும் மனிதர்களுக்கு இருப்பது போலவே உள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில், மருத்துவ ரீதியில் இதனை 'டிஸ்பெஸியா' என அழைப்பதாகவும் இது மிகவும் அரியதாக ஏற்படக்கூடிய நிகழ்வு எனவும் 50,000 விலங்குகளில் ஒன்றுக்கே இவ்வாறு மனித முகம் அமைய வாய்ப்பு இருப்பதாகவும் மருத்துவர்கள் தெரிவித்துள்ளனர்.

அத்துடன் பெரும்பாலும், ஆடுகளிலேயே இவ்வாறு நடப்பதாகவும், மூளையில் அதிகப்படியான திரவம் சுரப்பதால் ஏற்படும் வீக்கமே இதற்குக் காரணம் எனவும் மருத்துவர்கள் தெரிவித்துள்ளனர்.

2020ஆம் ஆண்டு ராஜஸ்தான் மாநிலத்தின் நிமோடியா என்ற கிராமத்தில் மனித முகத்துடன் பிறந்த ஆட்டுக்குட்டியை மக்கள் வணங்கி வந்தமை குறிப்பிடத்தக்கது.



கேரளா

# காதல் ஜோடியின் வித்தியாசமான அழைப்பு

கேரளாவைச் சேர்ந்த ராகுல் - கார்த்திகா என்ற இருவர் தமது திருமணத்தில் கலந்து கொள்ளுமாறு இந்திய இராணுவ வீரர்களுக்கு அழைப்பு விடுத்த சம்பவம் நெகிழ்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

குறித்த இருவருக்கும் கடந்த 10ஆம் திகதி திருமணம் நடைபெற்றுள்ளது.

இந்நிலையில் இந்திய எல்லையில் பாதுகாப்புப் பணியில் ஈடுபட்டுள்ள இராணுவ வீரர்களுக்கு மரியாதை செலுத்தும் வகையில், இராணுவ வீரர்களை தமது திருமணத்தில் கலந்து கொள்ளுமாறு இருவரும் அழைப்பு விடுத்துள்ளனர்.


எனினும் அவர்களது திருமணத்தில் இந்திய இராணுவத்தினர் பங்கேற்கவில்லை எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இந்நிலையில் இது குறித்து அத்தம்பதியினர் ஒரு பதிவை தமது சமூக வலைத்தளத்தில் பகிர்ந்துள்ளனர்.

**"இந்திய எல்லையில் பாதுகாப்புப் பணியில் ஈடுபட்டுள்ள இராணுவ வீரர்களுக்கு மரியாதை செலுத்தும் வகையில், இராணுவ வீரர்களை தமது திருமணத்தில் கலந்து கொள்ளுமாறு தம்பதிகள் விடுத்த அழைப்பில் பின்வருமாறு குறிப்பிடப்பட்டிருந்தது. 'எப்போதும் எங்களைக் பாதுகாப்பாக காத்திடும் உங்களுக்கு நாங்கள் நன்றிக்கடன் பட்டிருக்கிறோம். உங்களால் தான் நாங்கள் அமைதியாக திருமணத்தை நடத்துகின்றோம். இத் திருமணத்தில் உங்களது வருகையையும் ஆசிர்வாதத்தையும் வேண்டுகின்றோம்'**

குறித்த பதிவில், தமது திருமண அழைப்பிதழை பதிவிட்டு, 'எப்போதும் எங்களைக் பாதுகாப்பாக காத்திடும் உங்களுக்கு நாங்கள் நன்றிக்கடன் பட்டிருக்கிறோம். உங்களால் தான் நாங்கள் அமைதியாக திருமணத்தை நடத்துகின்றோம். இத் திருமணத்தில் உங்களது வருகையையும் ஆசிர்வாதத்தையும் வேண்டுகின்றோம்' எனப் பதிவிட்டுள்ளனர்.

இப்பதிவைத் தொடர்ந்து இந்திய இராணுவம், ராகுல் மற்றும் கார்த்திகாவுக்கு நன்றியையும் வாழ்த்துகளையும் தெரிவித்துள்ளனர்.






புதுடெல்லி

## காதலியை 35 துண்டுகளாக வெட்டிய காதலன்

# வாக்குமூலத்தில் குழப்பம்



புதுடெல்லியில் அண்மையில் ஷ்ரத்தா என்ற இளம்பெண்ணை, அவரது காதலன் அஃப்தாப் அமீன் கொலை செய்து, 35 துண்டுகளாக வெட்டி வீசிய சம்பவம் இடம்பெற்றிருந்தது.

இந்நிலையில் கைதுசெய்யப்பட்டுள்ள அஃப்தாப் அமீனிடம் நேற்று (21) உண்மையைக் கண்டறியும் சோதனை நடத்தப்பட்டது.

பொலிஸாரின் விசாரணையின் போது அஃப்தாப் அமீன் பலமுறை வாக்குமூலத்தை மாற்றி மாற்றி கூறிய நிலையில், ஆஃப்தாபிடம் உண்மைக் கண்டறியும் சோதனையை நடத்த புதுடெல்லி சாகேத் மாவட்ட நீதிமன்றம் அனுமதி அளித்துள்ளது.

இதையடுத்தே அமீனிடம் புதுடெல்லியில் உள்ள அம்பேத்கர் மருத்துவமனையில் உண்மை கண்டறியும் சோதனை நடத்தப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேற்கு வங்கம்

# அதிகாரியிடம் நாய் போல குரைத்துக் கெஞ்சிய நபர்



தொகுதி வளர்ச்சி அலுவலர் தனது காரில் புறப்படும் போது, அங்கு வந்த ஸ்ரீகந்தி துட்டா என்பவர், நாய் போல் குரைத்து அவரிடம் கெஞ்சிய விநோத சம்பவம் மேற்கு வங்கத்தில் இடம்பெற்றுள்ளது.

மேற்கு வங்கம் மாநிலத்தின் பங்கரா என்ற இடத்தில், நபரின் ரேசன் அட்டையில் அவரது பெயரான துட்டா என்பதற்குப் பதிலாக குட்டா (நாய்) எனத் தவறுதலாக அச்சிடப்பட்டிருந்தது.

இந்நிலையில் இத்தவறை சரி செய்ய, குறித்த நபர் உரிய அதிகாரிகளை நாடிய போது, அதிகாரிகள் இவ்விடயத்தை கண்டுகொள்ளவில்லை.

இதனால் விரக்தியடைந்த அவர், அப்பகுதிக்கு தொகுதி வளர்ச்சி அலுவலர் வருகை தந்தபோது, நாய் போல நடித்து தனக்கு உதவுமாறு கோரியுள்ளார்.

இது குறித்த வீடியோவானது இணையத்தில் வைரலாகி வருகின்றது.

இந்நிலையில் இவ் வீடியோ எடுக்கப்படும் போது தான் மனதளவில் பாதிக்கப்பட்டிருந்ததாக துட்டா தெரிவித்துள்ளார்.

மேலும் "நான் எனது பெயரில் இருக்கும் தவறை சரி செய்ய சில நாள்களாக முயன்று கொண்டிருக்கிறேன். மூன்றாவது முறையாக எனது பெயர் துட்டா என்பதற்கு பதிலாக குட்டா என எழுதப்பட்டது என்னை மனதளவில் பாதித்துள்ளது.

அரசு சார்ந்த கடமைகளை ஆற்ற வேண்டிய கட்டாயம் பொது மக்களுக்கு இருக்கிறது. ஆனால் இதற்கு அரசு அதிகாரிகள் ஒத்துழைப்பு வழங்குவதில்லை. எத்தனை நாள்கள் தான் வேலையை விட்டுவிட்டு நாம் அலைந்துகொண்டிருக்க முடியும்?" எனக் கேள்வி எழுப்பியுள்ளார்.

# த்ரிஷாவுக்கு கிடைத்த முத்தம்



தமிழ் திரையுலகில் கடந்த 20 ஆண்டுகளாக நாயகியாக நடித்து வருபவர் த்ரிஷா. அவரது நடிப்பில் வெளியான 'பொன்னியின் செல்வன்' திரைப்படம் மிகப் பெரிய வெற்றி பெற்றது.

'பொன்னியின் செல்வன்' திரைப்படத்தில் குந்தவை கேரக்டருக்கு அவரை விட்டால் வேறு யாரும் பொருத்தமாக இருக்க மாட்டார் என்ற அளவுக்கு அவரது நடிப்பு மிக சிறப்பாக இருந்தது.

இந்த நிலையில் த்ரிஷா தனது இன்ஸ்டாகிராம் பக்கத்தில் வெளியிட்டுள்ள வீடியோவில் ஒரு சின்ன குழந்தை தனது போஸ்டருக்கு உதட்டு முத்தம் கொடுக்கும் காட்சியின் வீடியோவை பதிவு செய்துள்ளார்.

இந்த வீடியோவுக்கு 2 லட்சத்துக்கும் அதிகமான லைக்ஸ் கிடைத்துள்ள நிலையில் ஏராளமான கருத்துகளும் பதிவாகி வருகின்றன. இந்த வீடியோ தற்போது வைரல் ஆகி வருகிறது.

## 21 ஆண்டுகளுக்கு பின்

# ஜோதிகாவின் ரீஎண்ட்ரி



தமிழ் தெலுங்கு திரைப்படம் திரையுலகில் முன்னணி நடிகையாக இருந்த நடிகை ஜோதிகா, சூர்யாவை திருமணம் செய்த பின்னர் சில ஆண்டுகள் திரையுலகில் இருந்து விலகியிருந்தார். பின்னர் '36 வயதினிலே' என்ற படத்தின் மூலம் தமிழில் ரீ என்ட்ரி ஆனார்.

இந்த நிலையில் 21 ஆண்டுகள் கழித்து நடிகை ஜோதிகா இந்தி திரையுலகில் ரீ என்ட்ரி ஆக இருப்பதாக தகவல்கள் வெளியாகியுள்ளது. கடந்த 2001ஆம் ஆண்டு 'லிட்டில் ஜான்' என்ற ஹிந்தி படத்தில் நடித்த ஜோதிகா அதன்பின் 21 ஆண்டுகள் கழித்து தற்போது ஒரு ஹிந்தி படத்தில் நடிக்க ஒப்பந்தமாகி வருகிறார்.

ஸ்ரீகாந்த் பொல்லா என்ற தொழிலதிபரின் வாழ்க்கை வரலாறு படத்தில் நாயகியாக ஜோதிகாவை நடிக்க படக்குழுவினர் அணுகியதாகவும், அதற்கு ஜோதிகா சம்மதம் தெரிவித்து விட்டதாகவும் கூறப்படுகிறது.

இந்தப் படத்தில் தொழிலதிபர் ஸ்ரீகாந்த் பொல்லா கேரக்டரில் ராஜ்குமார் ராவ் என்பவர் நடிக்கிறார். துஷார் இத்ராணி என்பவர் இந்தப் படத்தை இயக்க உள்ளார்.



# 'மங்காத்தா 2' உருவாகிறதா?

பிரபல இயக்குநர் வெங்கட் பிரபு இயக்கத்தில் அஜீத் மற்றும் அர்ஜுன் நடிப்பில் உருவான மங்காத்தா திரைப்படம் மிகப் பெரிய வெற்றி பெற்றது.

இந்த நிலையில் கடந்த சில ஆண்டுகளாக 'மங்காத்தா' படத்தின் இரண்டாம் பாகத்தை வெங்கட் பிரபு இயக்க வேண்டும் என்று ரசிகர்கள் கோரிக்கை விடுத்து வருகின்றனர்.

இந்தக் கோரிக்கைக்கு பதிலளித்த வெங்கட்பிரபு, 'மங்காத்தா 2' படத்தின் கதை தயாராக இருக்கிறது என்றும் அஜித் எப்போது ஓகே சொன்னாலும் அந்தப் படத்தை ஆரம்பிக்க தான் தயாராக இருப்பதாகவும் தெரிவித்திருந்தார்.

இந்த நிலையில் 'மங்காத்தா' படத்தில் இரண்டு முக்கிய கேரக்டர்களில் நடித்து இருந்த அஜீத் மட்டும் அர்ஜுன் ஆகியோர் அண்மையில் சந்தித்துள்ளனர்.

இந்தச் சந்திப்பு குறித்த புகைப்படம் இணையதளங்களில் வைரலாகி வருகிறது. இதனை அடுத்து விரைவில் 'மங்காத்தா' படத்தின் இரண்டாம் பாகம் தொடங்கப்படுமா? என்ற எதிர்பார்ப்பு ரசிகர்கள் மத்தியில் உள்ளது.

# தரையில் நீதுசந்திரா

'யாவரும் நலம்' என்ற திரைப்படத்தின் மூலம் தமிழில் அறிமுகமான நடிகை நீதுசந்திரா அதன் பின்னர் 'தீராத விளையாட்டுப் பிள்ளை' 'ஆதிபகவன்', 'வைகை எக்ஸ்பிரஸ்' உள்ளிட்ட பல படங்களில் நடித்தவர்.

இந்த நிலையில் நீண்ட இடைவெளிக்கு பின்னர் தற்போது தமிழில் ஒரு படத்தில் நீத்து சந்திரா நடித்து வருகிறார். இந்தப் படத்தின் படப்பிடிப்பு தற்போது விறுவிறுப்பாக நடைபெற்று வருகின்றது.

**"நீதுசந்திரா தரதரவென இழுத்துச் செல்லும் காட்சி படமாக்கப்பட்டது**

இந்த நிலையில் இந்தப் படத்தில் அவரை தரதரவென இழுத்துச் செல்லும் காட்சி படமாக்கப்பட்டது. இது குறித்த வீடியோவை நீதுசந்திரா தனது சமூக வலைத்தளத்தில் பதிவு செய்துள்ளார்.

நடிகை நீது சந்திராவை தரதரவென இழுத்து செல்லும் காட்சி எந்தப் படத்திற்காக படமாக்கப்பட்டது என்பதை நீத்து சந்திரா குறிப்பிடவில்லை என்றாலும் சுந்தர் சி, அனுராக் காஷ்யப் நடிப்பில் உருவாகி வரும் 'ஒன் டு ஒன்' என்ற படத்தின் படப்பிடிப்பு தான் இது என்று கூறப்படுகிறது.



# சிம்ரன் கொடுத்த அப்டேட்




நீண்ட இடைவெளிக்கு பின்னர் நடிகர் பிரசாந்த் நடித்து வரும் திரைப்படம் 'அந்தகன்'. இந்தப் படத்தில் பல வருடங்களுக்குப் பின்னர் பிரசாந்துடன் சிம்ரன் ஜோடி சேர்ந்துள்ளார்.

அண்மையில் இந்தப் படத்தின் பாடல் காட்சி ஒன்று பிரமாண்டமாக உருவாக்கப்பட்டது. இந்த நிலையில் நடிகை சிம்ரன் தனது சமூக வலைத்தளத்தில் 'அந்தகன்' படத்தின் படப்பிடிப்பு முற்றிலும் முடிவடைந்து விட்டதாகவும் இந்தப் படத்தை திரையில் பார்க்க எதிர்பார்த்து காத்திருப்பதாகவும் தெரிவித்துள்ளார்.

**"ஹிந்தியில் வெளியான அந்தாகான் என்ற படத்தின் தமிழ் ரீமேக் படமான இந்தப் படம் மிகப் பெரிய எதிர்பார்ப்பை ஏற்படுத்தி உள்ளது. மேலும் இந்தப் படம் பிரசாந்துக்கு ஒரு நல்ல ரீ என்ட்ரி படமாக இருக்கும்**

ஹிந்தியில் வெளியான அந்தாகான் என்ற படத்தின் தமிழ் ரீமேக் படமான இந்தப் படம் மிகப் பெரிய எதிர்பார்ப்பை ஏற்படுத்தி உள்ளது. மேலும் இந்தப் படம் பிரசாந்துக்கு ஒரு நல்ல ரீ என்ட்ரி படமாக இருக்கும் என்றும் கூறப்படுகிறது.

பிரசாந்த், சிம்ரன், ப்ரியா ஆனந்த், சமுத்திரக்கனி, யோகி பாபு, வனிதா விஜயகுமார் உள்ளிட்ட பலர் நடித்துள்ள இந்தப் படத்தை தியாகராஜன் இயக்கியுள்ளார். சந்தோஷ் நாராயணன் இசையமைத்துள்ளார்.



உலகக் கிண்ணம்:

# கட்டாரை வீழ்த்திய ஈக்குவடோர்

கட்டாரில் 22ஆவது கால்பந்தாட்டத் உலகக் கிண்ணத் தொடரானது நேற்று முன்தினம் (20) ஆரம்பித்த நிலையில், நேற்று முன்தினம் நடைபெற்ற முதலாவது குழு ஏ போட்டியில் 2-0 என்ற கோல் கணக்கில் கட்டாரை ஈக்குவடோர் வென்றது.

ஈக்குவடோர் சார்பாகப் பெறப்பட்ட இரண்டு கோல்களையும் அணித்தலைவர் இன்னர் வலென்சியா பெற்றிருந்தார்.

இந்நிலையில், இன்று பிற்பகல் 3.30 மணிக்கு நடைபெறவுள்ள குழு சி போட்டியில் சவுதி அரேபியாவை ஆர்ஜென்டீனா எதிர்கொள்ளவுள்ளதுடன், மாலை 6.30 மணிக்கு நடைபெறவுள்ள குழு டி போட்டியில் துனீஷியாவை டென்மார்க் எதிர்கொள்ளவுள்ளதுடன், இரவு 9.30 மணிக்கு நடைபெறவுள்ள குழு சி போட்டியில் மெக்ஸிக்கோவும், போலந்தும் மோதவுள்ளன. நாளை மறுதினம் அதிகாலை 12.30 மணிக்கு நடைபெறவுள்ள போட்டியில் அவுஸ்திரேலியாவை நடப்புச் சம்பியனான பிரான்ஸ் எதிர்கொள்கிறது.



இந்தியாவுக்கெதிராக

# தொடரை சமப்படுத்துமா நியூசிலாந்து?

நியூசிலாந்து, இந்திய அணிகளுக்கிடையிலான மூன்றாவது இருபதுக்கு - 20 சர்வதேசப் போட்டியானது நேப்பியரில் இன்று நண்பகல் 12 மணிக்கு நடைபெறவுள்ளது.

மூன்று போட்டிகள் கொண்ட இத்தொடரின் முதலாவது போட்டியில் முடிவேதும் பெறப்படாததோடு, இரண்டாவது போட்டியில் இந்தியா வென்ற நிலையில், இப்போட்டியை வென்றாலே தொடரை நியூசிலாந்து சமப்படுத்த முடியும்.

மருத்துவ சந்திப்பொன்று காரணமாக இப்போட்டியை கேன் வில்லியம்ஸன் தவறவிடுகின்ற நிலையில், இப்போட்டியில் நியூசிலாந்துக்கு டிம் சௌதி தலைமை தாங்கவுள்ளதுடன், குழாமில் மார்க் சப்மன் இணைத்துக் கொள்ளப்பட்டுள்ளபோதும், அணியில் அவரை மிஷெல் பிறேஸ்வெல் பிரதியிடுவார் என எதிர்பார்க்கப்படுகிறது.

இந்நிலையில், இந்திய அணியில் ஹர்ஷால் பட்டேலுக்கு இப்போட்டியில் வாய்ப்பு கிடைக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

பாடசாலைகளுக்கிடையிலான தேசிய கராத்தே தொடரில்

# கிழக்கு மாகாணத்துக்கு மூன்று பதக்கங்கள்




அஸ்ஹர் இப்றாஹிம்

அகில இலங்கை பாடசாலைகளுக்கு இடையிலான தேசிய கராத்தே தொடர் கண்டி மாநகர உள்ளக அரங்கில் நடைபெற்றது.

இப்போட்டியில் கிழக்கு மாகாணத்துக்கு ஒரு தங்கப் பதக்கம், இரண்டு வெண்கலப் பதக்கங்கள் உட்பட மூன்று பதக்கங்கள் கிடைக்கப்பெற்றன.

மட்டக்களப்பு மெதடிஸ்த மத்திய கல்லூரி மாணவன் எம். குருஷாத், காத்தா நிகழ்ச்சியில் தங்கப் பதக்கமும் அக்கரைப்பற்று இராம கிருஸ்ண மிஷன் மகா வித்தியாலய மாணவன் பீ. மதன்ராஜ், இருபது வயதுக்கு உட்பட்ட காட்டா நிகழ்சியில் வெண்கலப் பதக்கமும், திருகோணமலை ஓசில் விவேகானந்தா கல்லூரி மாணவன் ரீ. அனோஜ், இருபது வயதுக்குட்பட்ட குமித்தே நிகழ்ச்சியில் வெண்கலப் பதக்கத்தையும் பெற்றுக் கொண்டனர்.

**“அகில இலங்கை பாடசாலைகளுக்கு இடையிலான தேசிய கராத்தே தொடர் கண்டி மாநகர உள்ளக அரங்கில் நடைபெற்ற போட்டியில் கிழக்கு மாகாணத்துக்கு மூன்று பதக்கங்கள் கிடைக்கப்பெற்றன**

அபு தாபி குரான் பிறீ:

# வென்றார் வெர்ஸ்டப்பன்



போர்மியுலா வண் நடப்பாண்டு சம்பியன்ஷிப்பின் இறுதிப் பந்தயமாக நேற்று முன்தினம் நடைபெற்ற அபு தாபி குரான் பிறீயில் ஏற்கெனவே சம்பியனான மக்ஸ் வெர்ஸ்டப்பன், தனது சாதனையை நீடிக்கும் முகமான பருவகாலத்தின் 15ஆவது வெற்றியைப் பதிவு செய்து கொண்டார்.

பந்தயத்தில் இரண்டாமிடத்தை பெராரி அணியின் சார்ள்ஸ் லெக்கலெர்க் பெற்றிருந்ததோடு, மூன்றாமிடத்தை றெட் புல் அணியின் சேர்ஜியோ பெரேஸ் பெற்றிருந்தார்.

சம்பியன்ஷிப் புள்ளிகள் பட்டியலில் றெட் புல் அணியின் வெர்ஸ்டப்பன் 454 புள்ளிகளைப் பெற்றதோடு, மொனாக்கோவின் லெக்கலெர்க் 308 புள்ளிகளையும், மெக்ஸிக்கோவின் 305 புள்ளிகளையும் பெற்றிருந்தார்.

அமெரிக்கா

# விடுதியில் துப்பாக்கி சூடு: 5 பேர் உயிரிழப்பு; 25 பேர் காயம்




அமெரிக்காவின் கொலோராடோ பகுதியில் உள்ள `LGBTQ `இரவு விடுதியொன்றில் 19 ஆம் திகதி மர்ம நபர் ஒருவர் நடத்திய துப்பாக்கிச் சூட்டில் 5 பேர் உயிரிழந்துள்ளனர்.

சம்பவ தினத்தன்று குறித்த விடுதிக்குள் நுழைந்த மர்ம நபர் அங்கிருந்தவர்கள் மீது கண்மூடித்தனமாகத் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டுவிட்டுத் தப்பிச் செல்ல முற்படுகையில் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

இத்தாக்குதலில் 5 பேர் உயிரிழந்துள்ள நிலையில் 25 க்கும் மேற்பட்டோர் காயமடைந்த நிலையில் வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றனர்.

இந்நிலையில் பொலிஸாரின் விசாரணையில், தாக்குதல் நடத்திய நபரின் பெயர் ஆண்டர்சன் எனவும், அவருக்கு 22 வயது எனவும் தெரியவந்துள்ளது.

எனினும் இத்தாக்குதல் மேற்கொண்டமைக்கான காரணம் பற்றித் தகவல் வெளியாகவில்லை.

இந்நிலையில் இச்சம்பவத்துக்கு அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் கடும் கண்டனம் தெரிவித்துள்ளார்.

அமெரிக்கா

# பேத்தியின் திருமணத்தில் பைடன்





அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடனின் பேத்தி நவோமிக்கு கடந்த 19 ஆம் திகதி வெள்ளைமாளிகையில் திருமணம் நடைபெற்றுள்ளது.

28 வயதான நவோமி, தன்னுடன் சட்டக்கல்லூரியில் பயின்ற 25 வயதான பீட்டரை மணம் முடித்தார்.

வெள்ளை மாளிகையின் தெற்கு பகுதியிலுள்ள புல்வெளியில் எளிமையான முறையில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த திருமண வரவேற்பில் ஜனாதிபதி ஜோபைடன் அவரது மனைவி ஜில்பைடன் உட்பட இருதரப்பு உறவினர்கள் மாத்திரமே பங்கேற்றிருந்தனர்.

வெள்ளை மாளிகையில் ஜனாதிபதியின் குடும்ப திருமண விழா நடைபெறுவது இதுவே முதன்முறை என்று தெரிவிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.



ஈரான்

# ஹிஜாப் அணியாததால் பிரபல நடிகை கைது


ஈரானில் அண்மையில் ஹிஜாப்பினை முறையாக அணியவில்லை எனக் கூறி கைது செய்யப்பட்ட மஹ்சா அமினி என்ற இளம்பெண் பொலிஸார் தாக்கியதில் உயிரிழந்தார்.

இச்சம்பவமானது உலகளவில் பெரும் அதிர்வலைகளை ஏற்படுத்தியிருந்த நிலையில், இதற்கு எதிர்ப்பு தெரிவித்து ஆயிரக்கணக்கானோர் தொடர் போராட்டங்களில் ஈடுபட்டு வருகின்றனர்.

இந்நிலையில், ஹிஜாப்க்கு எதிரான போராட்டத்தை ஆதரித்து ஹிஜாப் அணியாமல் இன்ஸ்டாகிராமில் வீடியோ பதிவிட்ட பிரபல ஈரானிய நடிகை ஹெங்கமே காசியானியை அந்நாட்டுப் பொலிஸார் கைது செய்துள்ள சம்பவம் மேலும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

குறித்த வீடியோவில் “இது எனது கடைசிப் பதிவாகக்கூட இருக்கலாம்” என அவர் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.





அமெரிக்கா

# ஆரம்பமானது பிரம்மாண்ட வாகனக் கண்காட்சி



அமெரிக்காவின் லொஸ் ஏஞ்சல்ஸ் நகரில் நேற்று முன்தினம் (20) புகழ்பெற்ற 2022 L.A. AUTO SHOW வாகனக் கண்காட்சி கோலாகலமாக ஆரம்பமானது.


கன்வென்ஷன் சென்டரில் ஆரம்பமான இவ்வாகனக் கண்காட்சியில், 30க்கும் மேற்பட்ட நிறுவனங்களின் புதிய மொடல் வாகனங்கள் காட்சிப்படுத்தப்பட்டுள்ளன.

அந்தவகையில் வருகின்ற 27ஆம் திகதி வரை நடைபெறவுள்ள கண்காட்சியைப் பார்வையிட ஆயிரக்கணக்கான மக்கள் வருகை தருவார்கள் என எதிர்பார்க்கப்படுகின்றது.

1907ஆம் ஆண்டு முதல் நடைபெற்றுவரும் இக்கண்காட்சியானது உலகளவில் மிகவும் செல்வாக்கு மிக்க வாகனக் கண்காட்சியில் ஒன்றாகப் பார்க்கப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

அமெரிக்கா

# உலகின் மிக நீளமான பாதங்கள்




‘உலகின் நீளமான பாதங்களைக் கொண்ட பெண்’ என்ற கின்னஸ் சாதனையை டெக்சாஸை சேர்ந்த தான்யா ஹெர்பெர்ட் என்பவர் படைத்துள்ளார்.

6 அடி 9 அங்குலம் உயரம் கொண்ட இவரது காலணியின் இலக்கம் 18 ஆகும். இது குறித்துக் கருத்துத் தெரிவித்த தான்யா “கடைகளுக்குச் சென்று எனக்கு காலணிகள் வாங்குவது என்பது இயலாத காரியமாகவுள்ளது. காரணம், பெரும்பாலான கடைகளில் 18 ஆம்இலக்க, அதுவும் பெண்களுக்கான காலணிகள் கிடைப்பது கடினம். எனினும் இணையம் மூலம், என்னைப் போலவே உயரமாக இருக்கும் பெண்களிடம் பேசி அவர்களின் பரிந்துரைகளின்படி, தற்போது காலணிகளை அணிய



தொடங்கியுள்ளேன்” என்றார்.

விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டினால் செவ்வாய்க்கிழமை, 22 நவம்பர் 2022, இல. 08, ஹுணுபிட்டி குறுக்கு வீதி, கொழும்பு - 02 இல் வடிவமைக்கப்பட்டு இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது.